வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.03.2024 சனிக்கிழமை இதழ் : 69 பக்கங்கள் : 12

# கஜேந்திரன் எம்.பி. உட்பட 8 பேர் வெடுக்குநாறி மலையில் கைது!

## வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவேளையில்



வவுனியா, மார்ச் 09

**வெடுக்குநாறி மலையில் வழிபாட்டில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந் திரன் உட்பட 8 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர்.**

என்றாலும், கைது செய்யப் பட்டு சில நிமிடங்களில் பாராளு மன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந் திரனை விடுவித்த பொலிஸார் ஏனையோரை பொலிஸ் நிலையத் துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

வெடுக்குநாறி மலை யில் மாலை 6 மணிக்கு மேல் யாரையும் தரித்து நிற்க வேண்டாம் பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்த பின் புலத்திலேயே இந்த கைது இடம் பெற்றுள்ளது. கோயிலுக் குள் துப்பாக்கி, பொல்லுகள் தாங்கியவாறு சப்பாத்து

11



வடக்கின் பெரும்போர்:

## யாழ். மத்திய கல்லூரி பலவீனமான நிலையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கின் பெரும் போர் பெரும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி வாய்ப்பில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ். மத்திய கல்லூரி நேற்று இரண்டாம் நாள் ஆட் டம் முடிவில் 140 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்துள்ளது. இன்னும் ஒரு விக்கெட்டே கைவச முள்ள நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரியை விட 69 ஓட்டங்களே முன்னிலை வகிக்கிறது.

11

## ராஜபக்ஷர்களின் கோரிக்கையை நிராகரித்தார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, மார்ச் 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெர முனவின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு தோல்வியில் முடிவடைந்துள்ளதாக ஆளுங்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இந்தச் சந்திப்பில் அடுத்த தேர்தலுக்கான கூட்டணித் தொடர்பில் கலந்துரையாடல்கள்

11

## இலங்கையில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு ஆறு நாடுகள் போட்டி

ரஷ்யாவுடன் கைகோர்க்க ஆர்வம்

கொழும்பு, மார்ச் 09

இலங்கையில் அணுமின் நிலையங்களை அமைப்ப தற்கான ஆறு முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக அர சாங்கம் தெரிவித்துள்ளது.

“இலங்கையில் அணுசக்தியின் சாத்தியமும் அதன் சவால்களும்” என்ற தலைப்பில் இலங்கை பொறி யாளர் கள் நிறுவனம் அண்மையில் ஏற்பாடு செய் திருந்த கருத்தரங்கில் உரையாற்றிய இலங்கை

11



மகா சிவராத்திரி தினமான நேற்று நல்லூர் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டின் போது...
(படம் : ஐ.சிவசாந்தன்)

## ராஜபக்ஷக்கள்தான் நாட்டை ஆளவேண்டும்

சொல்கிறார் மொட்டு கட்சி எம்.பி.

கொழும்பு, மார்ச் 09

ராஜபக்சக்கள் பக்கம் நிற்பது பாவம் அல்ல. எனவே, ராஜபக்சக்கள் இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆள்வ தையே நான் விரும்புகின்றேன் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, மூன்றாவது

11

## வடக்குக்கு விரைவில் புதிய பிரதம செயலர்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடமாகாண பிரதம செயலாளராக புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

வடமாகாண பிரதம செயலாளராக சமன் பந்துலசேன தற்போது பொறுப்பு வகிக்கிறார். அவர் அந்த பொறுப் புக்கு நியமிக்கப்பட்ட போது, கடுமையான எதிர்ப்புக் கள் கிளம்பியிருந்தன. சிங்களவர் ஒருவர் வடக்கு பிரதம செயலாளரா என தமிழ் அரசியல்வாதி களும் எதிர்த்தனர். ஆனால் அப்போது

11

## இலங்கையின் அர்ப்பணிப்பை பாராட்டுகிறது நாணய நிதியம்



கொழும்பு, மார்ச் 09

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அர சாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுவ தாகவும், அத்தகைய அர்ப்பணிப்புக்கள் முன்னேற்றகர மான மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான

11

## உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு ஜெனிவாவை ஏமாற்றும் நாடகமல்ல!

கூறுகின்றார் அலி சப்ரி

கொழும்பு, மார்ச் 09

உண்மை மற்றும் நல் லிணக்க ஆணைக்குழு வென்பது படையினரை பலிகடாவாக்கும் பொறி முறை அல்ல. அதே போல ஜெனிவாவை ஏமாற்றுவதற்கான கண் துடைப்பு நாடகமும் அல்ல, எமது பிரச்னையை நாமே தீர்க்க கூடிய வகை யிலான பொறிமுறை யொன்றை உருவாக்குத லாகும் - என்று வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

உண்மையை கண் டறியும் ஆணைக்குழுவை அறிமுகப்படுத்தும் போது அதற்கு இரு தரப்பினர் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். எவ்வித பிரச்னைக்கும் தீர்வை தேட விரும்பாத தெற் கில் உள்ள ஒரு

11

## வெப்பநிலை அதிகரிக்கும்

கொழும்பு,மார்ச் 09

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்ப நிலை அதிகரிக்கக் கூடும் என வளிமண்ட லவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் சீரான வானிலை நிலவக் கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

'இப்படியும் நடக்கிறது' என்ற இந்தப் பத்தி எழுதத் தொடங்கி பல வருடங்கள் கடந்துவிட்டன. இப்போது முதல் தடவையாக அதில் எழுதப்பட்ட விடயம் தொடர்பாக ஒருவரிடமிருந்து மறுப்புக் கடிதம் கிடைத்திருக்கின்றது.

இப்படியொரு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பது குறித்து ஏற்கனவே ஒரு டிஜிற்றல் பத்திரிகை எழுதியிருந்தது பற்றி, நண்பர்கள் முன்னதாகவே தெரிவித்திருந்தனர். அதனால் அது எதிர்பார்க்கப்பட்டது தான்.

ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் அவர்களிடமிருந்து வந்த அந்தக் கடிதம், தன்னைப் பற்றி எழுதப்பட்ட தவறான செய்திக்காக உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு திருத்தம் செய்து பிரசுரிக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தது. சுமந்திரனிடம் இருந்து கிடைத்த அந்தக் கடிதத்தை இங்கே இந்தப் பக்கத்திலேயே தனியாக பிரசுரித்திருக்கின்றோம்.

அதனைப் படித்துவிட்டு பின்னதாக இந்தப் பத்தியைப் படிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

சுமந்திரன் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அது தவறான அறிக்கையிடுதல் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அவர் குறிப்பிடுவதுபோல, தவறானதும் பொய்யானதுமான அறிக்கையிடுதல் என்பதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

தவறு என்பது தன்னை அறியாமல் நிகழ்வது - எதிர்பாராமல் இடம்பெறுவது. ஆனால், பொய் என்பது தெரிந்துகொண்டு சொல்வது. ஆனால், பொய் பேசுதல்கூட ஒரு நிலையில் வாய்மையாகக் கருதப்படும் என்கிறார் வள்ளுவர். ஒருவன் பொய் பேசுவதால் பிறருக்கு நன்மை விளையுமானால் அது பொய்யாகாது. அதுவும் வாய்மையாகக் கருதப்படும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். சிலவேளை நாங்கள் அப்படி தவறாக எழுதியது பிறருக்கு நன்மை விளையும் என்று சுமந்திரன் கருதியதால்தான் அதனை பொய் என்றாரோ தெரியவில்லை.

அது தவறான அறிக்கையிடுதல் என்பதை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் அது பொய்யான அறிக்கையிடுதல் அல்ல என்பதையும் - அதாவது அது பொய்யான செய்தி என்று தெரிந்துகொண்டு அதனை பதிவிடவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

வழக்கு தாமதமாவதற்கு தான்தான் காரணம் என்று பொய்யான செய்தியைப் பரப்பும் தீயநோக்கோடு அது பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது என்ற முடிவுக்கும் அவர் வந்திருக்கிறார். அப்படி எந்தவொரு தீயநோக்கமும் இந்தப் பத்தியை எழுதும்போது எமக்கு இருக்கவில்லை என்பதை இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கில் அன்றைய தினம் கட்சியின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் வழக்கில் வழக்காளி தரப்பில் குற்றம்சாட்டப் பட்டது போல கட்சி யாப்பில் சில விதிகள் மீறப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்வதாக மன்றுக்கு தெரிவித்திருந்தனர்.

வழக்கில் ஏழு எதிராளிகளில் ஆறாம் எதிராளியான சுமந்திரன் அன்றைய தினம் வருகை தராததால், அவரின் கருத்தை அறிவதற்காக வழக்கை வேறு ஒரு திகதிக்கு மன்று ஒத்திவைக்கப் போகும்போது -

3ஆம் எதிராளி சத்தியலிங்கம், 5ஆம் எதிராளி குலநாயகம் ஆகியோர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி சுமந்திரன் அவர்களின் கனிஷ்ட சட்டத்தரணியாகவும் பணியாற்றுபவர் என்பதால், அவரிடம் சுமந்திரனுக்கு வசதியான திகதியைப் பெறுவதற்கு கட்சி சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி முயன்றார். அவரிடம் பெறப்பட்ட திகதியையே நீதிமன்று அடுத்த தவணைக்காகத் திகதியிட்டது.

'அவ்வாறு அவரிடம் பெறாமல் ஒரு திகதியை நீதிமன்று நிர்ணயித்திருந்தால், அந்தத் தினத்தில் சுமந்திரனுக்கு வேறு நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தால் அவரால் பிரசன்னமாக முடியாமல் போகலாம் என்பதற்காகவே சுமந்திரனின் கனிஷ்ட சட்டத்தரணியிடமிருந்து அவருக்கு வசதியான திகதியைப் பெற முயற்சி செய்யப்பட்டதாக கட்சி சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா இந்த ஊர்க்குருவியிடம் கூறினார்.

நீதிமன்ற செய்திகளை அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்கள் வழக்கமாக நீதிமன்ற பதிவேடுகளை சரிபார்த்தே செய்திகளை சேகரிப்பது வழக்கமானது. ஆனால், அந்த வழக்கின் முக்கியத்துவம் கருதி அதனை விரைவாக வழங்கும் அவசரத்தில் செய்த இந்தத் தவறு சுமந்திரனுக்கு ஏற்படுத்திய அசௌகரியங்களுக்காக வருந்துகின்றோம்.

**- ஊர்க்குருவி.**

# கொழும்பில் காற்று மாசுபாடு மோசம்

கொழும்பு, மார்ச் 09

கொழும்பில் காற்று மாசுபாடு நிலைமை மோசமாகி வருவதாக வானிலை திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி கொழும்பு நகரின் காற்றுச் சீரமைப்பானது 158 ஆகக் காட்டப்பட்டுள்ளதுடன், சுட்டெண் மேலும் மோசமடைந்தால், கடுமையான அவதானம் செலுத்தப்படவேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கொழும்பைத் தவிர அக்குறணை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் வளி மாசு நிலைமை மோசமாக உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஐஸ்கிறீம் வியாபாரியால் குழப்பம்!

வெடுக்குநாறிமலையில் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரியினை பொலிஸார் அங்கிருந்து செல்லுமாறு கூறியதால் ஆலய வளாகத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

வெடுக்குநாறிமலையில் நேற்று சிவராத்திரி தின வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்ற பொதுமக்களுக்கு பொலிஸாரினால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பொதுமக்களுக்கு குடிதண்ணீரை கொண்டு சென்ற நீர்தாங்கி பொலிஸாரால் இடைவழியில் நிறுத்தப்பட்டதால் 5கிலோமீற்றர்கள் நடந்துசென்ற பொதுமக்கள் நீர் இன்றி அசௌகரியத்தை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலய வளாகத்தில் ஐஸ் கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவரை பொலிஸார் விற்பனையில் ஈடுபட வேண்டாம் என தெரிவித்து ஆலய வளாகத்தை விட்டு அகற்றியதால், அங்கிருந்த பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இப்படியும் நடக்கிறது: சுமந்திரன் அனுப்பியுள்ள கடிதம்!

ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான ம. அ. சுமந்திரன் 'ஈழநாடு' ஆசிரியருக்கும் வெளியீட்டாளருக்கும் முகவரியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தை கீழே அப்படியே தருகின்றோம்.

*01. 03. 2024* வெள்ளிக்கிழமை பிரசுரமான ஈழநாடு பத்திரிகை

மேற்சொன்ன பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் 'இப்படியும் நடக்கிறது' என்ற தலையங்கத்தின் கீழ் பின்வரும் பகுதி பிரசுரமாகி இருக்கின்றது:

"வழக்காளி எந்தக் காரணங்களுக்காக வழக்கு தொடுத்தாரோ அந்தக் காரணங்களை ஏற்றுக்கொண்ட பின்னர் வழக்கு உடனேயே முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், எதிர்த் தரப்பாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ம. ஆ. சுமந்திரன் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சயந்தன் தனது தரப்பின் சில விபரங்களை தெரிவிக்க வேண்டியிருப்பதால் வழக்குக்கு தவணை இடுமாறு விடுத்த கோரிக்கையை அடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது".

மேற்சொன்ன பகுதி முற்றுமுழுதாக உண்மைக்கு புறம்பானதும் வழக்கு தாமதமாவதற்கு நான்தான் காரணம் என்று பொய்யான செய்தியை பரப்பும் தீய நோக்கோடும் எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு அப்பால், நீதிமன்ற நடவடிக்கைகளை தவறானதும் பொய்யானதுமான அறிக்கையிடுதல் ஆகும்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் *29. 02. 2024* அன்று மேற்சொன்ன வழக்கில் நான் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதற்கு அப்பால் எனக்காக ஆஜராகும்படி எந்த சட்டத்தரணிக்கும் பதிலியோ, அறிவுறுத்தலோ நான் கொடுத்திருக்கவுமில்லை.

சட்டத்தரணி சயந்தனோ, வேறெந்த சட்டத்தரணியோ மன்றில் ஆஜராகுவதாக தெரிவித்திருக்கவுமில்லை. என் சார்பாக தவணை கோரவுமில்லை. மேற்சொன்ன பொய்யான நீதிமன்ற நடவடிக்கை அறிக்கையிடுதல் உடனடியாக உரிய முக்கியத்துவத்தோடு திருத்தம் செய்து பிரிசுரிக்கப்படல் வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக எனக்கு உரித்தான சகல சட்ட உரித்துகளையும் தக்க வைத்தவனாக இக்கடிதத்தை உங்களுக்கு அனுப்புகிறேன்.

(கையொப்பம்)

## தவறுக்கு வருந்துகின்றோம்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் 29. 02. 2024 அன்று தமிழ் அரசு கட்சி தொடர்பான வழக்கில் எம். ஏ. சுமந்திரன் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதற்கு அப்பால், அவருக்காக எந்த ஒரு சட்டத்தரணியும் ஆஜராக வில்லை என்பதையும், சட்டத்தரணி சயந்தனோ வேறெந்த சட்டத்தரணியோ மன்றில் ஆஜராகுவதாக தெரிவித்திருக்கவுமில்லை, அவர் சார்பாக தவணை கோரவுமில்லை. அவ்வாறு வெளிவந்த தவறான செய்திக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

# நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு!

கொழும்பு, மார்ச் 09

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி ஐ.எம்.எப் பிரதிநிதிகளுடன் நேரடியாக கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்க்க ட்சிகளின் தலைவர்களான சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)



ஈழநாடு
Eelanadu
09.03.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சதிக் கதைகள் ஏராளம்!

அதிகாரத்தை இழந்துபோன கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு விளக்கமளிக்கும் வகையில் ஒரு நூலை வெளியிட்டிருக்கின்றார். தான் திட்டமிட்டு அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டாரெனவும் அதற்கு பின்னால் ஆவேசம் கொண்ட சர்வதேச சக்திகள் செயல்பட்டன என்றும் அவர் வாதிட்டிருக்கின்றார். தான் ஒரு சிங்கள - பௌத்த தலைவனாக எழுச்சியுற்றிருந்த காரணத்தால்தான் தன்னை அனைவரும் திட்டமிட்டு அகற்றினர் என்றும் அவர் வாதிட முயற்சிக்கின்றார். இதன்மூலம் தான் தோற்கவில்லை - திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டேன் என்பதே அவரின் வாதமாகும்.

கோட்டாபயவின் கதை இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றுக்கு புதியது அல்ல - இது மிகவும் பழைய கதை. 2015இல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தபோது அவர் உடனடியாகவே இந்திய உளவுத்துறையின் மீதுதான் குற்றஞ்சாட்டியிருந்தார். அந்தத் தகவலை ஒரு பாகிஸ்தான் பத்திரிகையின் மூலமாகவே வெளிப்படுத்தியிருந்தார். இரு தினங்களில் அமெரிக்க உளவுத்துறை மற்றும் பிரித்தானிய உளவுத்துறை மீதும் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தத் தகவலை சீன பத்திரிகை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். இதன் மூலம் இந்திய - அமெரிக்க கூட்டுச் சதியின் மூலமே தான் தோற்கடிக்கப்பட்டதான ஒரு கதையையே சிங்கள மக்களுக்கு சொல்ல முற்பட்டார். மகிந்த கையிலெடுத்த அதே சுலோகங்களையே கோட்டாபய ராஜபக்ஷவும் கையிலெடுத்திருக்கின்றார். தோல்வியடையும் ஒவ்வொருவரும் கையிலெடுக்கும் விடயங்கள்தான் இவைகள்.

இவ்வாறான கதைகள் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலும் மிகவும் தாராளமாக முகம் காட்டும் விடயங்கள்தான். 2018இல் ஓர் அணியினர் உள்ளூராட்சி தேர்தலை உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டபோது எதிரணியினரால் இவ்வாறான சதிக் கதைகளே கூறப்பட்டன. ஜனாதிபதி தேர்தலின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிக்கும் முடிவை எடுத்தது - கஜேந்திரர்கள் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸோ தேர்தல் பகிஷ்கரிப்பு அறிவிப்பை வெளியிட்டது. ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலின்போதும் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு பின்னால் சர்வதேச சக்திகள் இருந்தன என்றே கதைகள் புனையப்பட்டன. விடுதலைப் புலிகள் மாற்று இயக்கங்களை தடை செய்த போதும் இவ்வாறான கதைகள்தான் சொல்லப்பட்டன. ரெலோ இந்தியாவின் செல்லப்பிள்ளை என்னும் கதைகள் புனையப்பட்டன. சதிக் கதைகள் புனையும் அரசியல் இப்போதும் முன்னரைப் போல் கவர்ச்சிகரமாகவே இருக்கின்றது. மக்களும் இவ்வாறான பரபரப்புகளை ரசிக்க விரும்புகின்றனர் என்றே தெரிகின்றது. பொதுவாக துப்பறியும் அல்லது திகில் சினிமாக்களில் ஒரு விறுவிறுப்பு இருப்பது இயல்பானது. அரசியல் சூழலில் சொல்லப்படும் இவ்வாறான சதிக் கதைகளும் அவ்வாறான ஒன்றுதான்.

ஆனால், இவ்வாறான சதிக் கதைகளில் பெரியதொரு துவாரம் உண்டு - அதாவது, இங்கு வாக்களிக்கும் மக்களை எவரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. மக்கள்தான் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு - குறிப்பிட்ட நபருக்கு வாக்களிக்கின்றனர். ஆனால், தோல்வியடைந்தவரோ - தான் சர்வதேச சதியால் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறுகின்றார். இந்த விடயத்தை தர்க்க ரீதியில் நோக்கினால் சர்வதேச சக்திகளால் தாங்கள் விரும்புகின்றவாறு இலங்கை மக்களை கையாள முடிகின்றது என்னும் தீர்மானத்துக்குத்தானே நாம் வரவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷவை பெரும் அலையாக திரண்டு ஆதரித்தவர்களும் சிங்கள மக்கள்தான் - அதே போன்று, அவரை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக ‘அறகலய’வில் திரண்டவர்களும் அவர்கள்தான். இலங்கையில் சிறுபான்மை மக்களால் இவ்வாறான எழுச்சிகளை திட்டமிடவோ - தீர்மானிக்கவோ முடியாது. கோட்டாபயவின் வாதத்தின்படி சிங்கள மக்களை சர்வதேச சக்திகள் தாங்கள் விரும்பியவாறு கையாள முடியும் என்றுதானே கூற முற்படுகின்றார். அவ்வாறாயின், அவர் முன்வைக்கும் சிங்கள - பௌத்த தேசியம் என்று ஒன்றில்லை என்பதுதானே பொருள்.

கோட்டாபய மீண்டும் தன்னை முன்னிறுத்த முற்படுகின்றார் என்பது தெளிவாகவே தெரிகின்றது. அதற்கு அவருக்கு சதிக்கதைகள் தேவைப்பட்டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால், வெறும் இனவாதத்தின் மூலம் இலங்கைத் தீவை முன்கொண்டு செல்லலாம் என்னும் நிலைப்பாடுகள் மீளவும் இந்த நாட்டின் மக்களை நடுவீதிக்கே கொண்டுவரும். தோல்வி அடைபவர்கள் தங்களது தோல்விக்கான காரணங்களை தங்களுக்குள் தேட வேண்டும். தோல்விகள் எவையும் வெளியிலிருந்து வருவதில்லை.

# தாய்மார்களுக்கு நல்லது செய்வதே எனக்கு முக்கியம்!

*கொழும்பு, மார்ச் 09*

*“நாட்டில் கூட்டங்களை நடத்தி பெண்களின் உரிமைகளை காக்க வேண்டும் என்று தம்பட்டம் அடிக்காமல் பிரயோக ரீதியில் நடைமுறையில் அதனை செயற்படுத்த வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.*

*சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட மூச்சு வேலைத்திட்டத்தின் கீழ், கொழும்பு காசல் வீதி மகப்பேற்று வைத்தியசாலைக்கு 46 இலட்சம் ரூபா பெறுமதியான சுகாதார உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*நாட்டின் மிக உயர்ந்த சட்டமான அரசியலமைப்பில் மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கப்படுகிறது, ஆனால் அதில் சுகாதாரம், கல்வி மற்றும் நல்வாழ்வுக்கான உரிமைகள் குறிப்பிடப்படவில்லை.*

*ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் கீழ் சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம் மற்றும் ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை என்பன சேர்க்கப்படும். பெயருக்கு இலவச சுகாதார சேவை இருந்தால் மட்டும் போதாது. அது தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். விமசர்னங்களை முன்வைக்கும் உயர் வர்க்கத்தினர் எந்தக் குறையும் இல்லாது, ஆடம்பரமான சுகாதார முறைகளை பயன்படுத்தி வருகின்றனர்.*

*எல்லா இடங்களிலும் கூட்டங்களை நடத்தி, பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என கூறுவதாக இருந்தால், முதலில் இலவச சுகாதார சேவை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.*

*இரண்டு இலட்சம் வாக்குகளை விடவும் இரண்டு இலட்சம் தாய்மார்களுக்கு நல்லது செய்வது எனக்கு முக்கியம். பேரூந்துகளில் பெண்களை அழைத்து வந்து கூட்டம் நடத்தும் தேவை எமக்கு இல்லை வங்குரோத்தான நாட்டில், இந்தப் பணத்தைப் பயன்படுத்தி பேரூந்துகளை வாடகைக்கு எடுத்து, பெண்களை திரட்டி, பெண் உரிமைகள் தொடர்பான உரைகளை எம்மாலும் நடத்தமுடியும்.*

*சர்வதேச பெண்கள் தினத்தில் ஒரு நாளில் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தாய்மார்களின் உயிரைக் காக்கும் இயந்திரங்களை நன்கொடையாக வழங்க முடிந்தமை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்- என்றார்.* *(அ)*

# இரு புதிய சட்டமூலங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை!

*கொழும்பு, மார்ச் 09*

*நாட்டில் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய இரண்டு சட்டமூலங்களும் எதிர்வரும் மே மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.*

*அவளுக்கான பலம் - அவளுக்கான முன்னேற்றம் என்ற தொனிப்பொருளில் 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது.*

*குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் போது, எமது நாட்டில் விழா நடத்துவது, பெண்களின் உரிமைகள் பற்றி பேசிவிட்டு வீடு திரும்புவதுதான் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. இது ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றது.*

*ஆனால் இந்த முறை அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த பெண்களின் குரலை செயல்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம். பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பது என்பது வெறும் பேச்சில் மட்டும் நின்றுவிடக் கூடாது இந்த ஆண்டு மகளிர் தினத்தை கொண்டாடும் பெண்கள் சட்டத்தின் அதிகாரத்துடனும் பாதுகாப்புடனும் வீடு திரும்புவார்கள்.*

*ஆசியாவிலேயே முதன்முறையாக எமது நாட்டில் பாலின அடிப்படையிலான வரவு செலவுத் திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். ஆசியாவிலேயே முதன்முறையாக இது நடக்கிறது. கனடா உட்பட இரண்டு மூன்று நாடுகளில் மட்டுமே இது நடைமுறையில் உள்ளதுபெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்கு சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.*

*பெண்கள் வலுவூட்டல் சட்ட வரைபு நேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பாலின சமத்துவ சட்ட வரைபையும் எதிர்வரும் வாரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படும் நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு ஸ்தாபிக்கப்படும்.*

*அதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பது குறித்து அறிக்கை தயாரித்தேன். 2018ஆம் ஆண்டிலேயே இதனை நடைமுறைப்படுத்த திட்டமிட்டிருந்த போதிலும் எங்களால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. அதன் பின்னர், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலால், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை - என்றார்.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்புக்கூடும் நாள்.

**இடபம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும். உங்களை புரிந்து கொள்ள மாட்டார். நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலைவாங்குவீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி மன அமைதி கிட்டும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மனம் தெளிவு பெறும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. மறைமுக அவமானம் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

# முருகன் கடவுச்சீட்டை பெறுவதற்கு தூதரகம் செல்வதற்கு அனுமதியுங்கள்

## கணவருக்காக நளினி நீதிமன்றில் மனு



சென்னை, மார்ச் 09

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனையின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட முருகன் கடவுச்சீட்டை பெறுவதற்கு இலங்கை துணைத் தூதரகத்துக்கு சென்றுவர அனுமதி வழங்கக் கோரி அவரின் மனைவி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில், 'முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுவித்தது. இந்நிலையில், இலங்கை குடிமகன் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் எனது கணவர் முருகன் தங்கவைக்கப்பட்டுள்ளார். லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால், அனைத்து நாடுகளுக்கும் செல்வதற்கான கடவுச்சீட்டு வழங்க கோரி இருவரும் விண்ணப்பித்திருந்தோம். நேர்காணலுக்காக ஜனவரி 30ஆம் திகதி அழைக்கப்பட்டோம்.


இந்த நேர்காணலில் எனது கணவர் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. திருச்சி முகாமில் மோசமான சூழல் உள்ளது. ஒரு மாதத்தில் இருவர் உயிரிழந்தனர். எனவே, என்னுடைய கணவருக்கு எதுவும் நடப்பதற்கு முன்பாக, நாங்கள் இருவரும் மகளுடன் சேர்ந்துவாழ விரும்புகிறோம்.

எனவே எனது கணவர் முருகன் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு சென்று நேர்காணலில் பங்கேற்பதற்கான அனுமதியை வழங்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். அங்கு சென்று வருவதற்கு பாதுகாப்பு தேவைப்படும்பட்சத்தில், உரிய பாதுகாப்பு வழங்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது இந்த வழக்கு விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார். இதையடுத்து, நளினியின் வழக்கை வேறு அமர்வில் பட்டியலிடும் வகையில் தலைமை நீதிபதியின் ஒப்புதலை பெற பதிவுத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளானர்.

(ஐ)

# சிறுமி கொலையை கண்டித்து புதுச்சேரியில் கடையடைப்பு!



புதுச்சேரி, மார்ச் 09

சிறுமி கொலையை கண்டித்து நேற்று எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. இந்தப் போராட்டத்தால் புதுச்சேரி முடங்கியது.

புதுவை முத்தியால்பேட்டை சோலை நகரைச் சேர்ந்த 9 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் புதுவை பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.

இதைத் தொடர்ந்து அங்கு, ஆர்ப்பாட்டங்கள், முற்றுகை போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன. இந்த நிலையில், நேற்று கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதையேற்று புதுச்சேரி முழுவதும் நேற்று முடங்கியது.

(ஐ)

# ஸ்டாலினுடன் திருமா சந்திப்பு

சென்னை, மார்ச் 09

தி. மு. க. கூட்டணியில் விடுதலை சிறுத்தைகளுடனான தொகுதி உடன்பாடு எட்டப்படாத நிலையில் நேற்று முதல்வர் ஸ்டாலினை திருமாவளவன் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பாராளுமன்ற தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தமிழ்நாட்டில் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. கூட்டணி பேச்சுகளில் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. தி. மு. க. கூட்டணியில் சிறு கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு முடிவடைந்துள்ளது. எனினும், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், ம. தி. மு. க. கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு இன்னும் எட்டப்படவில்லை. பேச்சில் இழுபறி நீடிக்கிறது.

இந்த நிலையில், இந்த நிலையில் தி. மு. க. தலைவரும் முதலமைச்சருமான ஸ்டாலினை விடுதலை சிறுத்தைகளின் கட்சித் தலைவர் நேற்று நேரில் சந்தித்தார்.

இதையடுத்து, தி. மு. க. கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியுடனான பேச்சில் உடன்பாடு எட்டப்படும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# யாருடன் கூட்டணி அமைப்பது? பா. ம. கவின் தீர்மானம் இன்று!

சென்னை, மார்ச் 09

கூட்டணி குறித்து இன்றைய தினம் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் முடிவெடுப்பார் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர்.

பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது என்று கடந்த பெப்ரவரி முதலாம் திகதி நடந்த பா. ம. கவின் பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, அ. தி. மு. க. - பா. ஜ. க. ஆகிய கட்சிகளுடன் பா. ம. க. பேச்சு நடத்தி வருகிறது.

கடந்த 2016இல், தமிழகத்தில் மாநில கட்சி அந்தஸ்தை இழந்த பா.ம.க., புதுச்சேரியில் மாநில அந்தஸ்து பெற்ற கட்சியாக இருந்தது. ஆனால், கடந்த ஆண்டு புதுச்சேரியிலும் மாநில கட்சி அந்தஸ்தை இழந்தது.

எனவே, வரும் பாராளுமன்றத் தேர்தலில் குறைந்தது, இரண்டு எம்.பிக்களை பெற்றால் மாநில கட்சி அந்தஸ்தை பா. ம. க. பெறும். எனவே, அ.தி.மு.க., கூட்டணியில் சேர வேண்டும் என ஒரு தரப்பினரும், மத்திய அமைச்சர் பதவி உறுதி தந்தால், பா. ஜ. கவுடன் சேரலாம் என்று அன்புமணி தரப்பினரும் கூறி வருகின்றனர்.

எனினும், கூட்டணி குறித்த இறுதி முடிவு இன்று எடுக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் நேற்று கவனவீர்ப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 09

**வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.**

**தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவை ஒட்டி - 2209ஆவது நாளான நேற்று நீதிக்கான எழுச்சிப் பேரணியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

போராட்டத்தின்போது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறும் நிலையில்ல எமக்கான நீதி எங்கே? என கேட்கிறோம் என போராட்டக்காரர்கள் தெரவித்தனர்.

அத்துடன், இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள், நீதி தேவதை ஏன் கண் மூடி விட்டாய்?, சர்வதேசமே இன்று பெண்கள் தினமா? பெண்கள் ஒடுக்கப்படும் தினமா?, முடிவில்லா துயரம் தான் தமிழ் தாயின் தலைவிதியா?, 55 ஆவது தொடரிலாவது எமக்கு நீதி கிடைக்குமா?, கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி




விசாரணையே வேண்டும், பெண்கள் நாட்டின் கண்களா ? இல்லை கண்ணீருக்காக கண்களா? - என்ற கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் பேரணியில் வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# குரும்பசிட்டியில் விசமிகளால் புகையிலை கன்றுகள் அழிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 09

வலிகாமம் வடக்கு - குரும்பசிட்டி பகுதியில் இனந்தெரியாத விசமிகளால் புகையிலை கன்றுகள் வெட்டி சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கடந்த 30 வருட காலமாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட குறித்த விவசாயி, விவசாயம் மூலம் தனது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தி வருகின்றார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தோட்டத்துக்குள் புகுந்து 200க்கும் மேற்பட்ட புகையிலைக் கன்றுகளை வெட்டி சேதமாக்கி விட்டு சென்றுள்ளனர்.

# யாழின் மூத்தகுடிமகன் 107 வயதில் காலமானார்!

தென்மராட்சி, மார்ச் 09

107 வயது வரை வாழ்ந்தவர் நேற்று சுகயீனம் காரணமாக காலமானார்.

சாவகச்சேரி - உதயசூரியன் பகுதியை சேர்ந்த பூச்சி வேலுமுத்து என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

1917ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 107ஆவது பிறந்த நாளை அண்மையில் வெகுவிமர்சையாகக் கொண்டாடியிருந்தார்.

இவருக்கு 10 பிள்ளைகள், 75 பேரப்பிள்ளைகள், 25 பூட்டப்பிள்ளைகள் 5 கொள்ளுப் பேரப்



பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த ஒரு மாதகாலமாக சுகயீனமடைந்திருந்த நிலையில் அவர் காலமானார். (ஐ)

# விமானப் படையின் ஏற்பாட்டில் சைக்கிளோட்டப் போட்டிகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்ட போட்டி கொழும்பு காலிமுகத்திடலில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பணம் முற்றவெளி மைதானத்தை வந்தடைந்தது.

இதேபோன்று பெண்களுக்கான சைக்கிள் ஓட்ட போட்டி



மாங்குளத்தில் இருந்து யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நிறைவு பெற்றது.

இதில், சுமார் 35இற்கும் மேற்பட்ட பெண்களும் 140இற்கும் மேற்பட்ட ஆண்களும் கலந்து கொண்டனர். அத்துடன், வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ)


# காணிகளை விடுவிக்க வலியுறுத்தி தபால் அட்டை அனுப்பும் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 09

வடக்கில் படைகள் வசமுள்ள தங்களின் காணிகளை மீள ஒப்படைக்க வலியுறத்தி முல்லைத்தீவில் தபால் அட்டை அனுப்பும் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்' என்று கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தபால் அட்டைகளை மக்கள் அனுப்பினர். மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கில் மக்களின் காணிகளை பிடித்துள்ள படையினர் அதில், விவசாயம், பண்ணை,




வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், காணிகளின் உரிமையாளர்களான நாங்கள் இருக்க இடமின்றி வாடகை வீடுகளில் வசிக்கிறோம் என்று போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் 5 ஆயிரம் தபால் அட்டைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ)

# நண்பனின் 50 இலட்சம் ரூபாயை களவாடிச் சென்றவருக்கு வலை!

கொழும்பு, மார்ச் 09

வர்த்தகரான தனது நண்பன் உறக்கத்தில் இருக்கும்போது அவரின் பையில் இருந்த 50 இலட்சம் ரூபாய் பணத்தை திருடியவர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த திருட்டு சம்பவம் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு பணத்தை திருடி தப்பிச் சென்றவர் கொஸ்கொடை பிரதேசத்தை சேர்ந்த வராவார். இவர் பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய நண்பர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவரும் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக சென்றுள்ள நிலையில் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் அறையில் தங்கியிருந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர் அதிகளவில் மதுபானம் அருந்தி இருந்ததால் அவர் சிறிது நேரத்தில் போதையில் உறங்கியுள்ளார். இதன்போது சந்தேக நபர், உறக்கத்தில் இருந்த தனது நண்பனின் பையில் இருந்த 50 இலட்சம் ரூபா பணத்தை திருடி அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெப்பமான காலநிலையால் மனநலனும் பாதிக்கப்படும்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் வெப்பமான காலநிலையால் மனநலமும் கடுமையாக பாதிக்கப்படும் என்று மனநல மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நாட்களில் குடும்ப வன்முறைகளும் அதிகரித்துள்ளன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி மனநல கற்கைகள் பிரிவின் தலைவர் சிந்தக சந்திரகுமார தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலை மன ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

*சிவனொளிபாத மலை யாத்திரை*

# மூன்று மாதங்களில் மட்டும் 3 தொன் பிளாஸ்ரிக் சேகரிப்பு

நுவரெலியா, மார்ச் 09

**சிவனொளிபாத மலை பருவ காலம் ஆரம்பமான மூன்று மாதங்களில் 3 தொன் பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்பட்டன என்று மஸ்கெலியா பிரதேச சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர் எஸ். ராஜவீரன் தெரிவித்தவை வருமாறு,

சிவனொளிபாத மலையில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் யாத்திரிகர்களால் போடப்பட்டவைகளாகும். யாத்திரைக்கான மார்க்கத்தில் செல்லும் யாத்திரிகர்கள் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களை போடுவதற்கு குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சில யாத்திரிகர்கள் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களை குப்பைத் தொட்டிகளில் போடாமல் சுற்றுச்சூழலில் வீசுகிறார்கள்.

குப்பைகளை அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் உணவு பொருட்களை அப்புறப்படுத்துமாறு பிரதேச சபையினால் அறிவுறுத்தப்பட்டாலும் அதனை யாத்திரிகர்கள் பின்பற்றுவதில்லை.

சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் நல்லதண்ணி குப்பை சேகரிக்கும் மத்திய நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தனியாருக்கு விற்பனை செய்யப்படும்.

இதேவேளை, தற்போது நிலவும் வறண்ட வானிலை காரணமாக நல்லதண்ணி பிரதேசத்தில் குடிதண்ணீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண நீர் வழங்கல் சபையுடன் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது - என்றார். (ஐ)

# விமானப் படையின் கண்காட்சியில் கமல் குணரட்ண நேற்று பங்கேற்பு



கொழும்பு, மார்ச் 09

விமானப் படை முற்றவெளியில் நடத்திவரும் கண்காட்சியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண நேற்று பங்கேற்றார்.

விமானப் படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம்-2024" கண்காட்சி நிகழ்வுகள் "நட்பின் சிறகுகள்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மூன்றாவது நாளாகவும் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சி நாளை மறுதினம் வரை முற்பகல் 10மணி முதல் இரவு 11 மணிரை நடைபெறவுள்ளது.

இதில், நேற்றைய தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இதன்போது பல்வேறு சாகசங்களும் நிகழ்த்தப்பட்டன. (ஐ)

# இலங்கை பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகக்குறைவு!

## நெதர்லாந்து தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

இலங்கை வலுவான ஜனநாயக கொள்கையை கொண்டுள்ள போதிலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகக்குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இந்த நிலைமை வெகுவிரைவில் மாற வேண்டும் என இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பாக் தெரிவித்தார்.


உலகளவில் மக்கள் மத்தியில் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இதனால், கருத்து சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் விதமான சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. என்றாலும்கூட ஜனநாயக நாடொன்றில் மக்களின் கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது கட்டாயம் - என்றார். (ஐ)

# கியூப தூதர் அநுரவுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 09

மக்கள் விடுதலை முன்னணியின் பணிமனையில் இலங்கைக்கான கியூபத் தூதுவர் அண்ட்ரெஸ் மார்செலோ காரிடோ தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் கியூபத் தூதுவர் அலுவலகத்தின் பிரதான செயலாளர் மாரிபெல் டூரட் கொன்சலஸூம் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டனர்.



இதன்போது நீண்டகாலமாக கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் இருந்த அரசியல் தொடர்புகள் பற்றியும் நிகழ்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயல்பாடுகள் குறித்தும் விலாவரியாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலத்துக்கு முன்பாக கியூபா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பற்றியும் இன்றளவில் கியூபாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள நேரடி தொடர்புகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம், பிரச்னைக்குரிய பகுதிகள் பற்றியும் கியூபத் தூதுவர் அநுர குமார திஸநாயக்கவிடம் தெளிவுபடுத்தினார். (ஐ)

# தேரர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 09

புத்தளம் பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் இரு தேரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று புத்தளம் தலைமை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த தேரர்கள் இருவரும் புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விகாரையானது ஒரு வருடத்துக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது. விகாரை நிர்மாணிக்கப்பட்டது தொடக்கம் சிலர் இடையூறு ஏற்படுத்தி வந்தனர். இந்த நிலையிலேயே, சிலர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று புத்தளம் தலைமை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மூவருடன் மீன்பிடிக்க சென்ற படகு மாயம்!

கொழும்பு, மார்ச் 09

மீன்பிடிப்பதற்காக கற்பிட்டி கடலில் இருந்து புறப்பட்ட படகு ஒன்று மீண்டும் கரை திரும்பவில்லை என படகின் உரிமையாளர் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

ஈச்சங்காடு பிரதேசத்தை சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூவர் இந்த படகில் மீன் பிடிப்பதற்காக சென்றிருந்தனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கடற்படையினருக்கு தகவல் தெரிவித்துள்ள நிலையில் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மாணவியை அச்சுறுத்தி வன்புணர்ந்த ஆசிரியர்!

கொழும்பு, மார்ச் 09

அநுராதபுரத்தில் 14 வயது மாணவியை ஆசிரியர் அச்சுறுத்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலைய ஆசிரியரே மாணவியை அச்சுறுத்தி பலமுறை அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்யவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காற்று மாசுபாடு யாழிலும் அதிகம்!

கொழும்பு, மார்ச் 09

காற்று மாசுபாடு யாழ்ப்பாணத்திலும் அதிகளவில் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு நகரின் காற்று மாசுபாடு நிலைமை மோசமாகி வருவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு நகரங்களில் காற்றின் தர சுட்டெண் 158 - பி. எம். 2.5 ஆக உள்ளது. காற்றின் தரம் மேலும் மோசமடைந்தால், மிகுந்த அவதானம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தவிர, அக்குறணை, கண்டி ஆகிய நகரங்களிலும் காற்று மாசு மிக மோசமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பைத் தவிர அக்குறணை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் வளி மாசு நிலைமை மோசமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 4 உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன

கொழும்பு, மார்ச் 09

சதொசவில் 4 அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பால் மா, செத்தல் மிளகாய், வெள்ளை பச்சை அரிசி, வெள்ளை சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விலை குறைப்பு நேற்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 400 கிராம் உள்ளூர் பால் மா 935 ரூபாயாகவும், ஒரு கிலோ செத்தல் மிளகாய் 1,175 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 195 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 272 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையர்கள் ஆறு பேர் கனடாவில் வெட்டிக் கொலை!

றொறன்ரோ, மார்ச் 09

**கனடா தலைநகர் ஒட்டாவாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள கூட்டுக் குடும்ப படு கொலைச் சம்பவம் ஒன்றில் தாய் மற்றும் இரண்டு மாதக் குழந்தை உட்பட ஆறு பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். தந்தையார் படுகாயமடைந்துள்ளார்.**

**இவர்கள் அனைவரும் இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கோரப் படுகொலைகளை புரிந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**




ஒட்டாவாவின் புறநகரிலுள்ள ஒரு வீட்டிலேயே சடலங்கள் காணப்பட்டன. கனடா நேரப்படி புதன்கிழமை இரவு 10 - 11 மணியளவில் இந்தப் படுகொலைகள் நடந்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் வளர்ந்தவர்கள் இருவரும் இலங்கையின் பூர்வீக பிரஜைகள் என்பதை ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் கனடா செய்தி ஊடகங்களிடம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தக் குடும்பத்தினர் இலங்கையில் இருந்து மிக அண்மைக்காலத்திலேயே கனடாவில் குடியேறியவர்கள் என்றும் சில தகவல்கள் தெரிவித்தன.

நகரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள இந்தப் படுகொலைகள் தொடர்பாக ஒட்டாவா தலைமைப் பொலிஸ் அதிகாரி எரிக் ஸ்ரப்ஸ் செய்தியாளர்களுக்கு வெளியிட்ட தகவல்களின்படி தாயாரான 35 வயதான தர்ஷானி ஏகநாயக்கா, ஏழு வயதான இனுகா விக்கிரமசிங்க, நான்கு வயது மகளாகிய அஷ்வினி விக்கிரமசிங்க, இரண்டு வயதான ரின்யானா விக்கிரமசிங்க, இரண்டு மாதக் குழந்தையான கெல்லி விக்கிரமசிங்க, மற்றும் நாற்பது வயதுடைய அமரக்கோன் ஆகியோரே கூரான ஆயுதம் ஒன்றால் படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

தர்ஷானியின் கணவர் ஏகநாயக்கா படுகாயங்களுடன் மீட்கப்பட்டுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குடும்பத்தவர்களை கோரமாகச் வெட்டிகொன்றவர் என நம்பப்படும் 19 வயதான ஃபெப்ரியோ டி சொய்ஸா என்ற மாணவனை சம்பவம் நடந்த இடத்தில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவரும் இலங்கையைச் சேர்ந்தவராவார்.

அந்த மாணவனுக்கும் கொலையுண்ட குடும்பத்தினருக்கும் இடையே என்ன உறவு முறை என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. மாணவர் வீஸாவில் கனடாவுக்கு வந்த அவர் அந்தக் குடும்பத்தினரது வீட்டில் தங்கி வசித்து வந்தவர் என்று கூறப்படுகிறது.

நகரின் வரலாற்றிலேயே மிக மோசமான படுகொலை இது என்று ஒட்டாவா நகர முதல்வர் துயரம் வெளியிட்டிருக்கிறார். (ஐ)

# ஐ. எம். எவ். பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சிகள் பேச வாய்ப்பு

## ஜனாதிபதி சந்திப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 09

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரிதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி பணிமனை தெரிவித்துள்ளது.

இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி பணிமனையில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் குறித்து அதன் உயர்மட்டக் குழுவுடன் கலந்துரையாடுவதற்கு பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி பணிமனை தெரிவித்துள்ளது. (ஐ)

# அதிகளவு வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் பதிவாகின!

கொழும்பு, மார்ச் 09

தேசிய விமான சேவை நிறுவனமான சிறீ லங்கன் எயார்லைன்ஸ் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்பு விண்ணப்பங்களை பதிவு செய்துள்ளது.

விமான நிலைய சேவை முகவர் பதவிக்கு சிறீ லங்கன் எயார்லைன்ஸ் சுமார் 18 ஆயிரத்து 115 விண்ணப்பங்களை பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விமான நிறுவனம் குறைந்தது 688 பட்டதாரி பயிற்சி பொறியிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. சமீப காலத்துடன் ஒப்பிடுகையில், விமான நிலைய சேவை முகவர் பதவிக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது, விமான நிறுவனத்தால் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள அதிகபட்ச விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

“தேசிய விமான நிறுவனத்தில் சேர விரும்பும் சில ஆர்வமுள்ள இளைஞர்கள் உள்ளனர். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, எங்கள் இளைய தலைமுறையினர் தங்கள் தேசிய இலக்குக்கு உழைக்க வேண்டும், விமான உலகில் காலடி எடுத்து வைக்க வேண்டும், மேலும் உற்சாகமான பயணத்தைத் தொடங்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் காட்டுகிறது” - என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# தனது தாயை வன்புணர்ந்த மகன் களுத்துறையில் கைது!

கொழும்பு, மார்ச் 09

தனது தாயாரை வன்புணர்வு செய்த 20 வயதான மகனை களுத்துறை வடக்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் கடந்த 4ஆம் திகதி தனது 59 வயதான தாயரை வன்புணர்ந்துள்ளார். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தாயார் ஹொரணை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பரிசோதனையில் அவர் வன்புணர்வுக்கு உள்ளானமை தெரிய வந்தது. இதையடுத்து அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவரின் மகனே இவ்வாறான செயலை புரிந்தார் என்பது தெரிய வந்தது.

இதையடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர். கைதான இளைஞர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் போதையில் இருந்த அவருக்கு நடந்தவை எவையும் நினைவில்லை என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# கோட்டாபய ராஜபக்ஷவின் புத்தகம் ஒருநாளிலேயே விற்று தீர்ந்ததாம்!

கொழும்பு, மார்ச் 09

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய “என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்ற சதி” என்ற புத்தகம் வெளியான முதல் நாளிலேயே முற்றாக விற்று தீர்ந்ததாக விஜித யாப்பா பதிப்பகத்தின் தலைவர் விஜித யாப்பா தெரிவித்தார்.

சமூகத்தின் பல்வேறு தரப்பு மக்களும் தமது புத்தகக் கடைகளில் இருந்து புத்தகத்தை வாங்கினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் எம். பிக்கள் மற்றும் அரசியல்வாதிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




இந்த நூலின் பிரதான விநியோகஸ்தர் தமது நிறுவனம் எனத் தெரிவித்த விஜித யாப்பா, மேலும் ஒரு தொகுதி அச்சிடப்பட்ட புத்தகங்களை விநியோகிப்பதற்காக நேற்று கொண்டுவரப்பட்டன என்றும் அவர் கூறினார்.

மேலும், “புத்தகத்துக்கு அதிக கிராக்கி உள்ளது. எதிர்பார்த்ததை விட வேகமாக விற்பனையாகிறது” என்றும் சொன்னார். (ஐ)

# எங்களின் ஆட்சிக் காலத்தில் அரச சேவை சீரமைக்கப்படும்

## ஜே. வி. பி. சொல்கிறது

கொழும்பு, மார்ச் 09

தமது ஆட்சிக்காலத்தில் அரச சேவை மறுசீரமைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த மறுசீரமைப்பு மூலம் அரச சேவையில் ஈடுபடும் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்படும்.

அரச ஊழியர்களால் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அரச சேவை மேம்படுத்தப்படும். எங்களது ஆட்சிக் காலத்தில் அரச பணியாளர்கள் வினைத்திறனான முறையில் மக்களுக்கு சேவைகளை வழங்குவது உறுதி செய்யப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)



# ரணில், பஸில், மகிந்த சந்தித்து பேச்சு நடத்தினர்!

கொழும்பு, மார்ச் 09

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் பங்கேற்றார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதியை சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் மேலதிக கலந்துரையாடல்களுக்கு இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# கைபேசி அழைப்பு மூலம் 22 ஆயிரம் ரூபாய் மோசடி!

மட்டக்களப்பு, மார்ச் 09

**கைபேசி பணப்பரிமாற்றம் மூலமாக மோசடி சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.**

**நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 22 ஆயிரம் ரூபாய் பணத்தை ஒருவர் இழந்துள்ளார்.**

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மட்டக்களப்பு நகரில் வெதுப்பகம் ஒன்றின் உரிமையாளரின் படத்தை கைபேசியில் மோசடியாக பதிவு செய்த குழு ஒன்று அதைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ளது.

அவரின் புகைப்படத்துடன் கூடிய செயலி மூலமாக வெதுப்பக உரிமையாளரின் நண்பர்களுக்கு அழைப்பு ஏற்படுத்தியவர்கள், வெதுப்பக உரிமையாளர் போல் நடித்து அவரின் நண்பர்களிடம் பணம் பெற்றுள்ளனர். 22 ஆயிரம் ரூபாய் இவ்வாறு மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதுபற்றி பின்னர் அறிந்த அவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், இவ்வாறான மோசடி சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக செயல்படும்படி பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் இளம் பெண் கைதானார்!

வாழைச்சேனை, மார்ச் 09

போதை மாத்திரைகள், ஐஸ் போதைப்பொருள் மற்றும் கேரள கஞ்சா ஆகியவற்றுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை - செம்மண்ணோடை பகுதியில் வைத்து விசேட அதிரடிப் படையினர் அவரை கைது செய்தனர். 23 வயதான அந்தப் பெண்ணிடம் இருந்து 86 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

53 கிராம் 240 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 24 கிராம் கேரள கஞ்சா மற்றும் 1,950 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# தென்னையில் வெள்ளை ஈ; மக்கள் வாழ்வாதாரம் பாதிப்பு

திருகோணமலை, மார்ச் 09

கிண்ணியாவின் பல பகுதிகளிலும் தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக தென்னை மரங்களிலும் வாழை பூச்செடிகளிலும் வெண்ணிற ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது.

கிண்ணியாவின் பெரியாற்றுமுனை ஆலங்கேணி ரஹ்மானிய நகர், கட்டையாறு முதலான பிரதேசங்களில் தென்னை மரங்களில் வெண்ணிற ஈ தாக்கம் அதிகமாக உள்ளது.

இதனால் தமது தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களின் வளர்ச்சி குறைவடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதனால், தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மக்கள், இது விடயத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# கிழக்கு பல்கலையின் பட்டப் பின் கற்கைகள் பீடாதிபதியாக கென்னடி!

மட்டக்களப்பு, மார்ச் 09

கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டப் பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிபதியாகப் பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி பதவியேற்றுள்ளார்.

கடந்த முதலாம் திகதி இவரது பதவியேற்பு இடம்பெற்றது. கடந்த வருடம் ஜனவரி மாதம் இந்தப் பீடத்தைத் தொடங்குவதற்கான அனுமதிக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகி, பெப்ரவரி மாதம் முதலாம் திகதி 2023 ஆம் ஆண்டு வைபவ ரீதியாக இந்தப் பீடம் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் அந்தப் பீடத்துக்கான பீடாதிபதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கான நேர்முகத்தேர்வுகள் நடைபெற்று, கிழக்குப் பல்கலைக்கழக மூதவையால் அங்கிகரிக்கப்பட்டுப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிபதியின் நியமனம் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் இடம்பெற்றுள்ளது. பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி கடந்த 26 வருடங்களாக பல்கலைக்கழக சேவையில் ஈடுபட்டு வருவதுடன், பல வகையான பதவிகளையும் வகித்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில், பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் முதல் பீடாதிபதி பேராசிரியர் ஜீவரெத்தினம் கென்னடி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# திருக்கோவில் பிரதேசத்தில் சிவராத்திரி வழிபாடுகள்

திருக்கோவில், மார்ச் 09

அம்பாறை - திருக்கோவிலில் மகா சிவராத்திரி வழிபாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக, திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

திருக்கோவில் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி கே. ரவீந்திரன் தலைமையில் நடந்த நிகழ்வில், விநாயகபுரம் சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு, சிவஸ்ரீ ஆறுமுக கிருபாகர சர்மாவால் பூசைகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து சிவராத்திரி விரதம் தொடர்பான சிறப்பு சொற்பொழிவும் நடைபெற்றது.

நிகழ்வில் கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிமனை திருமலையில் திறப்பு

திருகோணமலை, மார்ச் 09

வன்னி ஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம், திருகோணமலையில் நேற்று வெள்ளிக்கிழமை வைக்கப்பட்டது.

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சன் சிவஞான சுந்தரம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

வன்னி ஹோப் நிறுவனத்தினுடைய செயல்பாடுகளை கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்கும் நோக்குடன், உட்துறைமுக வீதியிலுள்ள எஸ். எல். ஆர். சி கட்டட தொகுதியில் இந்தப் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.



நிகழ்வில் ஐ.எம்.எச்.ஓ நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

வாழ்வாதாரம், சமூக மேம்பாடு, கல்வி, அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களை வன்னி ஹோப் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வலம்புரி சங்கு விற்பனை; பிக்கு உட்பட இருவர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 09

மட்டக்களப்புக்கு விற்பனைக்காக மாத்தறையில் இருந்து கடத்தி வரப்பட்ட ஒருகோடி ரூபாய் பெறுமதியான வலம்புரி சங்கு ஒன்றுடன் பிக்கு உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நேற்றுமுன்தினம் இரவு விசேட அதிரடிப் படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்தனர் என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டியடி விசேட அதிரடிப் படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

கல்குடா பொலிஸார் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மனிதாபிமான உதவிகளை அனுப்ப காசாவில் துறைமுகம் நிறுவப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 09

**காசாவில் துறைமுகம் ஒன்றை அமெரிக்க இராணுவம் நிர்மாணிக்கும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் தனது காங்கிரஸ் உரையில் தெரிவித்தார். இது கடல் வழியாக காசாவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.**



தற்காலிக துறைமுகம் பலஸ்தீனர்களுக்கு மனிதாபிமான உதவியின் அளவை அதிகரிக்கும் என்றும் அந்த அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், காசாவில் அமெரிக்க படைகள் இதில் சேர்க்கப்படாது என்றும் அவர்கள் கூறினர்.

காசாவின் மக்கள் தொகையில் கால் பங்கினர் பஞ்சத்தின் விளிம்பில் இருக்கின்றனர் என்று ஐ. நா. கூறியுள்ளது. இதனிடையே துறைமுகம் அமைக்க பல வாரங்கள் ஆகும். தண்ணீர், உணவு மருந்து மற்றும் தற்காலிக தங்குமிடங்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும். சைப்ரஸ் வழியாக பயணிக்கும் இந்தக் கப்பலை இஸ்ரேலிய படைகள் ஆய்வுக்கு உட்படுத்தும்.

ஒக்ரோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் இஸ்ரேலுக்குள் நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 253 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதன் பின்னர், காசாமீது இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்தது. இதில், 30 ஆயிரத்து 800இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலில் 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் மிகக் குறைவான உணவு, தண்ணீருடன் வாழ்கின்றனர். பட்டினியால் வடக்கு காசாவில் சிறுவர்கள் உயிரிழக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. அண்மையில் உணவைப் பெற முயன்றவர்கள் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# நேட்டோ அமைப்பில் சுவீடன் இணைந்தது

ஸ்டாக்ஹோம், மார்ச் 09

நேட்டோ அமைப்பில் சுவீடன் நேற்று முன்தினம் இரவு உத்தியோகபூர்வமாக இணைந்தது. நேட்டோவின் 32ஆவது அங்கத்துவ நாடு சுவீடன் ஆகும்.

நீண்டகாலம் அணிசேரா நாடாக விளங்கிய சுவீடன், உக்ரைன்மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் பின்னர், நேட்டோவில் இணைவதற்கு விண்ணப்பித்தது.

எனினும், நேட்டோவில் சுவீடன் இணைவதற்கான சம்மதத்தை தெரிவிப்பதற்கு துருக்கியும் ஹங்கேரியும் தயங்கி வந்தன.

பின்னர் இந்த இரு நாடுகளும் தமது சம்மதத்தைத் தெரிவித்த நிலையில், நேட்டோவில் சுவீடன் இணைந்துகொண்டது.

நேட்டோவில் சுவீடன் இணைந்ததை வரவேற்றுள்ள சுவீடன் பிரதமர் ஊல்வ் கிறிஸ்டேர்சன், இது சுதந்திரத்துக்கான ஒரு வெற்றி - என்று கூறியுள்ளார்.

(ஐ)

### கொரிய தீபகற்பத்தில் பதற்றம்:

# போர் திறன்களை அதிகரிக்குமாறு வடகொரிய படைகளுக்கு உத்தரவு



பியோங்யாங், மார்ச் 09

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை அழிக்கும் போர் திறன்களை உருவாக்க வேண்டும் எனவும் தனது படைகளுக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் உத்தரவிட்டுள்ளார்.

கொரிய தீபகற்ப பகுதியில் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகள் மூலம் வடகொரியா அவ்வப்போது பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும் ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இதனை தங்களுக்கு எதிரான போர் ஒத்திகையாக வடகொரியா கருதுகிறது. எனவே, தங்களை சீண்டும் நாடுகள் முற்றிலும் அழிக்கப்படும் என வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எச்சரிக்கையை புறக்கணித்து தென்கொரியா போர் ஒத்திகையை தொடர்கின்றது.

இந்தநிலையில் வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன் இராணுவ தளத்துக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை அழிக்கும் போர் திறன்களை உருவாக்க வேண்டும் எனவும் தனது படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# நைஜீரியாவில் 280 மாணவர்கள் துப்பாக்கிதாரிகளால் கடத்தல்!

நைகர், மார்ச் 09

நைஜீரியாவின் வடமேற்கு நகரமான குரிகாவில் 280 பாடசாலை மாணவர்கள் துப்பாக்கிதாரிகளால் கடத்தப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாணவர்கள் பாடசாலையில் பிரார்த்தனை கூடத்தில் இருந்தபோது துப்பாக்கிகளுடன் நுழைந்த பல பத்துப் பேர் மாணவர்களையும் ஆசிரியர் ஒருவரையும் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்டவர்கள் 8 - 15 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

குரிகா நகரம் அமைந்துள்ள கடுனா மாநிலத்தின் ஆளுநர் இது குறித்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பாடசாலையில் 187 மாணவர்களும், ஆரம்ப பாடசாலையில் 125 மாணவர்களும் கடத்தப்பட்டுள்ளனர். 25 மாணவர்கள் திரும்பியுள்ளனர். ஆசிரியர் ஒருவரும் கடத்தப்பட்டார். கடத்தலை தடுக்க முனைந்த உள்ளூர்வாசி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் - என்றார்.



நைஜீரியாவில் போகோ ஹாரம், ஐ. எஸ். பயங்கரவாதிகள் மாணவர்களை அடிக்கடி இவ்வாறு கடத்திச் செல்கின்றன. ஆட்சேர்ப்பு மற்றும் பணத்துக்காக இந்தக் கடத்தலில் அவர்கள் ஈடுபடுகின்றனர். எனினும், கடந்த ஆண்டு முதல் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் கடத்தல்கள் குறைவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இஸ்ரேல் - ஹமாஸ் பேச்சு ஒத்திவைக்கப்பட்டது!

கெய்ரோ, மார்ச் 09

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையிலான பேச்சு அடுத்த வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில், ரமழானுக்கு காஸாவில் போர் நிறுத்தம் நடைமுறையில் இருப்பது சிக்கலுக்கு உரியதாகியுள்ளது.

இதையடுத்து எகிப்து தலைநகர் கெய்ரோவில் இருந்து ஹமாஸ் பேச்சு குழுவினர் வெளியேறியுள்ளனர்.

இதனிடையே, பேச்சில் போர் நிறுத்தம் தொடர்பான உறுதிமொழிகளை வழங்க இஸ்ரேல் பிடிவாதமாக மறுத்து வருகிறது என்று ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும், ஹமாஸ், இஸ்ரேல் தரப்புகள் பேச்சு முறிந்து விடவில்லை. அடுத்த வாரம் தொடர்வோம் என்று குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# பாகிஸ்தானின் பஞ்சாப்பில் அமைச்சரானார் சீக்கியர்!

லாகூர், மார்ச் 09

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் முதன்முறையாக ஒரு சீக்கியர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கு, கடந்த மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற தேர்தலிலுக்குப் பிறகு, பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி. பி. பி.) மற்றும் பிற கட்சிகளுடன் இணைந்து முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பி. எம். எல். -என்) கட்சி ஆட்சி அமைத்தது.



நவாஸின் மகள் மரியம் நவாஸ் மாகாண முதல்வராகப் பொறுப்பேற்றார். அவர் அந்த மாகாணத்தின் முதல் பெண் முதல்வர் ஆவார். இந்நிலையில், மாகாணத்தின் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சராக பி. எம். எல்-என் கட்சியைச் சேர்ந்த பேரவை உறுப்பினர் சர்தார் ரமேஷ் சிங் அரோரா பவியேற்றுள்ளார்.

பஞ்சாப் மாகாணத்தில் ஒரு சீக்கியர் அமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ளது இதுவே முதல்முறையாகும். (ஐ)

# மார்பக புற்றுநோயால் தினமும் மூவர் மரணம்

**மருத்துவர் லங்கா ஜயசூரிய**

கொழும்பு, மார்ச் 09

**மார்பக புற்றுநோயால் எமது நாட்டில் தினமும் மூன்று பெண்கள் உயிரிழக்கின்றனர் என்று மருத்துவர் லங்கா ஜயசூரிய திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண்டியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்ட விடயத்தை வெளிப்படுத்தினார்.

நாட்டில் வருடாந்தம் ஆயிரத்து 95 பெண்கள் மார்பக புற்றுநோயால் இறக்கின்றனர். 5 ஆயிரத்து 475 பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது. இது மிகவும் வருத்தமளிக்கிறது. இந்த மார்பகப் புற்றுநோயால் எமது நாட்டில் தினமும் மூன்று பெண்கள் உயிரிழக்கின்றனர் என்றும் கூறினார். (ஐ)



# பஸ்களில், சிறார், பெண்கள்மீதான பாலியல் துன்புறுத்தல் குறைந்தது!

**பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச் 09

பேருந்து மற்றும் பொது இடங்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீது இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் அது தொடர்பான முறைப்பாடுகள் குறைவடைந்து வருகிறது என்று பிரதி பொலிஸ் மா அதிபரான பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட சோதனை நடவடிக்கைகளின் போது பேருந்துகளில் சிறுவர்கள், பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் நாள் ஒன்றில் 20 பேர் கைது செய்யப்பட்டனர். தற்போது அந்த எண்ணிக்கை இரண்டாகக் குறைவடைந்துள்ளது.



மற்றும் பொது இடங்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

தெற்காசியாவின் முன்னுதாரண பெண்கள்:

# உலக வங்கியின் பட்டியலில் இலங்கை தமிழர்கள் இருவர்!

புதுடில்லி, மார்ச் 09

தெற்காசியாவில் தடைகளைத் தாண்டி சாதித்து, ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் பெண் ஆளுமைகள் குறித்து உலக வங்கியின் பட்டியலில் இலங்கையர் இருவர் இடம்பிடித்துள்ளனர்.

அதாவது தொழில்முனைவோர், ஊடக நிர்வாகிகள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உள்ளிட்ட மிக முக்கிய பதவிகளை வகிப்பதில் சிறந்த ஆளுமைகளை கிளிர் ஹேர் பாத் (#ClearHerPath) என்ற ஹேஷ்டெக்குடன் உலக வங்கி பெண்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

11 பேர் அடங்கிய இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ள இருவரும் தமிழ் பேசும் பெண்கள் என்பது விசேட அம்சமாகும். விழுது என்ற சிவில் சமூக அமைப்புக்கு தலைமை தாங்கும் மைத்ரேயி ராஜசிங்கம் மற்றும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி வில்சன் ஆகியோரே இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

தெற்காசியாவில், நான்கு பெண்களில் ஒருவர் மாத்திரமே பணிபுரிகின்றனர் என்று உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல கோடி பெண்கள் வீட்டுக்கு வெளியே தொழில் அல்லது வேலையில் ஈடுபட்டு தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் வருமானம் ஈட்டி, தங்கள் சமூகங்கள் மற்றும் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் வாய்ப்பைப் பெறவில்லை என்பதே இதன் அர்த்தமென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாரபட்சமான சட்டங்கள் மற்றும் கொள்கைகள், கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகல் இல்லாமை மற்றும் ஊதியம் இல்லாத வேலை மற்றும் குடும்ப பராமரிப்புப் பொறுப்புகளின் நேரத்தைச் செலவழிக்கும் சுமை உள்ளிட்ட பல தடைகளை தெற்காசியப் பெண்கள் தொழிலில் ஈடுபடுவதில் எதிர்நோக்குகின்றனர்.

இருப்பினும் அந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து, வேலை செய்ய விரும்பும் பெண்களுக்கான பாதையைத் உருவாக்குவதற்கு, அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், சமூகங்கள் மற்றும் குடும்பங்கள் பங்களிக்க முடியும் என்று உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)

# சூரிய சக்தி மூலமான மின் திட்டம் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படும்!

**மின்சக்தி அமைச்சர் காஞ்சன**

கொழும்பு, மார்ச் 09

இந்தியாவின் 10 கோடி டொலர் கடன் திட்டத்தின் கீழ் சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்திட்டம் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கூறிய மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, மின்சக்தி துறையை இந்தியாவுக்கு விற்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சார கட்டண திருத்தத்துக்கு அமைய வீடுகளுக்கு 23.4 வீதமும் தொழில்சாலைகள், ஹோட்டல்களுக்கு 18 வீதமும், பொது சேவைகளுக்கு 22.3 வீதமும் மத தலங்களுக்கு 32.6 வீதமும் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றுக்கான கட்டண அதிகரிப்பு 12 - 18 சதவீதமாகவே காணப்பட்டது. எனவே அதிகரிக்கப்பட்டதை விட அதிகமாகவே கட்டணக்குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள், நிலக்கரி, நீர் மின் உற்பத்திகளுக்கு அப்பால் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மின் உற்பத்தியிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அதற்கமைய இந்தியாவின் 10 கோடி டொலர் கடன் திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், பொலிஸ், இராணுவ முகாம்கள் என்பவற்றில் சூரிய கலம்ஊடாக 9000 மெகாவோல்ட்ஸ் மின் உற்பத்தி திட்டத்தை மே மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதே போன்று சூரிய மற்றும் காற்றாலை ஊடான 10 மின்சார உற்பத்தி திட்டங்களுக்கான விலைமனுக்கள் எதிர்வரும் மாதங்களில் கோரப்படவுள்ளன. மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கான விலைமனு கோரல் அறிவிப்புக்கள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறியமை போன்று மின்சக்தி துறையை இந்தியாவுக்கு விற்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவின் காலத்திலேயே எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை ஊடகங்களில் வெளியிடுவதற்கும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நாம் தயார். இதேபோன்று 50 ரூபாய்க்கு ஒரு மின்சார அலகை கொள்வனவு செய்வதற்கு அதானி நிறுவனத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் உண்மைக்கு புறம்பானதாகும் - என்றார். (ஐ)



# இலங்கையின் அர்ப்பணிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு!

கொழும்பு, மார்ச் 09

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுகிறோம். இந்த அர்ப்பணிப்பு முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ருவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் அவரின் அமைச்சில் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபலன்களை காண முடிந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டுகள் - என்று பீற்றர் ப்ருவர் மேலும் கூறினார்.

இதன்போது, நாட்டை பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரிப்பதானது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டு முயற்சியை வலியுறுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



## கஜேந்திரன்..

அணிந்து உள்நுழைந்த பொலிசார், வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை பலாத்காரமாக- குண்டுக்கட்டாக தூக்கி வெளியே கொண்டு சென்றனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவரும் குண்டுக்கட்டாக தூக்கி வெளியே கொண்டு செல்லப்பட்டார்.

கோயிலில் அன்னதானத்துக்காக தயாராகிக் கொண்டிருந்த உணவுப் பொருட்களையும் பொலிசார் பறித்தனர்.

வெடுக்குநாறி மலையில் மாலை 6 மணிக்கு மேல் யாரையும் தரித்து நிற்க வேண்டாம் எனவும் அவ்வாறு தரித்தால் கைது செய்ய நேரிடும் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது கைது செய்யவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களை அகற்ற குறித்த மலை தொல்லியல் திணைக்களத்துக்கு சொந்தமானது என ஆரம்பத்தில் தெரிவித்த பொலிஸார் அதற்கான உரிய சான்றுகள் இல்லாத காரணத்தினால் இது வனவிலங்கு திணைக்களத்துக்கு உரியது என தெரிவித்துள்ளனர்.

வனவிலங்கு துறையின் அதிகாரிகளும் இதனை மறுத்தமையால் பொதுமக்கள் தொடர்ந்தும் அங்கு தரித்து நின்றனர்.

பொதுமக்கள் தொடர்ந்தும் தரித்து நிற்பதை தடுக்கும் நோக்கில் பொலிஸார் குறித்த தடையை விதித்தனர். (அ)

## ராஜபக்ஷக்கள்...

முறையாகவும் ராஜபக்ச ஒருவர் ஜனாதிபதியாக வருவதை நீங்கள் விரும்புகின்றீர்களா" என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ரோஹித அபேகுணவரதன,

" மூன்றாவது பரம்பரையாக அல்ல ராஜபக்சக்கள் தொடர்ச்சியாக பதவியில் இருப்பதை விரும்புகின்றேன். எனக்கு கட்சி தாவும் பழக்கம் கிடையாது. ஒரே அணியில்தான் இருக்கின்றேன். மஹிந்த ராஜபக்ச ராஜபக்ச என்ற தலைவர் இந்நாட்டுக்கு பெரும் சேவையாற்றியுள்ளார். எனவே, ராஜபக்சக்கள் பக்கம் நிற்பது பாவம் அல்ல." - என்றார்.

அதேவேளை, தேர்தல் ஆட்டத்துக்கு நாம் தயார். மட்டை தயாராகவே உள்ளது எந்த பந்து வந்தாலும் அடித்தாட தயார். அது ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் தயார், பொதுத்தேர்தலாக இருந்தாலும் தயார்." - என்றும் அவர் கூறினார். (அ)

## வடக்குக்கு...

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை.

சமன் பந்துலசேனவும் தன் மீது எந்த விமர்சனமும் வைக்க முடியாதபடி பணியாற்றியிருந்தார்.

தற்போது புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு பிரதம செயலாளர் பொறுப்பில் புதியவர் ஒருவரை நியமிக்க திட்டமிட்டுள்ளார்.

இந்த வார தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய போதும் இது பற்றி ரணில் பிரஸ்தாபித்திருந்தார். வடக்கு பிரதம செயலாளராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென தமிழ் அரசியல் பிரமுகர்கள் தெரிவித்த போது, தமிழ் பேசத் தெரிந்த ஒருவரே கண்டிப்பாக நியமிக்கப்படுவார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு பிரதம செயலாளராக, இளங்கோவன் நியமிக்கப்படவும் வாய்ப்புள்ளது. பிரதம செயலாளர் விவகாரம் விரைவில் அறிவிக்கப்படும் என நம்பப்படுகிறது. (அ)

## யாழ்.மத்திய கல்லூரி...

வடக்கின் பெரும் போர் என்று அழைக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 117ஆவது பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் அந்த அணி 56.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில், சயந்தன் அதிகபட்சமாக 55 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் நாள் ஆட்டம் முடிவில் 30.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சச்சின் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது சென். ஜோன்ஸ் கல்லூரி. சச்சினும் அணித் தலைவர் ஜேசியலும் ஆட்டத்தைத் தொடங்கினர்.

மேலதிகமாக 4 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சச்சின் ஆட்டமிழந்தார். அவர் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அனுசாந்தின் பந்தில் டெரிக்ஸனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நிலைத்த ஜேசியலுடன் ரன்ட்யோ களமிறங்கினார். இருவரும் மத்திய கல்லூரியின் பந்துவீச்சை சிறப்பாகக் கையாண்டனர். ரன்ட்யோ 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மறுமுனையில் ஜேசியல் அரைச்சதம் கடந்தார். அவர் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரி 70.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் 72 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் தீசன், அபிலாஷ் ஆகியோர் தலா 4 விக்கெட்களையும் அனுசாந்த் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது யாழ். மத்திய கல்லூரி. தொடக்கம் கொடுத்த சிந்துஜன் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த டெரிக்சன் முதல் பந்திலேயே கஜகர்ணனின் பந்தில் ஸ்மித்திடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார்.

மற்றொரு தொடக்க வீரரான சிமில்ரன் பொறுமையாக ஆட அடுத்து வந்த அனுசாந்த் சற்று அதிரடி காட்ட முனைந்தார். 3 பௌண்ட்ரிகளை விளாசிய அவர் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார். இந்த நிலையில், சிமில்ரன் 21 ஓட்டங்களில் வெளியேறினார்

பின்னர் வந்த வீரர்கள் ஓரளவுக்கு ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தனர். அஜய் 23, நியூட்டன் 17, சயந்தன் 16 என ஆட்டமிழந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்தபோது மத்திய கல்லூரி 42 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பருதி 15 ஓட்டங்களுடனும் தீசன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் சாம்சன், அசாந்த், கஜகர்ணன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் மாதுளன், ரன்ட்யோ ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும். (ஐ)

## உண்மை...

தரப்பும், சர்வதேசத்தில் உள்ள டயஸ்போராக்களுமே இவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இது பொய் எனவும், ஜெனிவாவை ஏமாற்றுவதற்கான கண்காணிப்பு நாடகம் எனவும் டயஸ் போராக்கள் கூறுகின்றனர், இது படையினரைக் காட்டிக்கொடுக்கும் செயல் என தெற்கில் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு எதுவும் இல்லை.

எமது நாட்டுக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இரு தீர்மானங்கள் உள்ளன. இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சிற்சில சம்பவங்கள் தொடர்பில் அவர்கள் தனியாக சாட்சியங்களை திரட்டி, வழக்கு தொடுக்ககூடும். இலங்கையில் நீதியை எதிர்ப்பார்க்க முடியாது என்பதாலேயே இந்நடவடிக்கை என அவர்கள் கூறுகின்றனர்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஊடாக நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலான பொறிமுறையை இலங்கையில் உருவாக்க முடிந்தால், தென்னாபிரிக்காவில் போன்று அந்த ஆணைக்குழு முன்னிலையில் போரால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களும் தமது கதைகளைக் கூறலாம். உள்நாட்டில் தீர்வை நோக்கி பயணித்தால் சர்வதேச தலையீடுகளை தவிர்த்துக்கொள்ளலாம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதிலை வழங்கமுடியும். இதனை அடைவதே இதன் நோக்கம்.

பிள்ளைகள் காணாமல்போய் இருந்தால் ஒன்று தேடி கொடுக்க வேண்டும், இல்லையேல் காரணம் கூற வேண்டும். இழப்பு நடந்திருந்தால் இழப்பீடு வழங்க வேண்டும்.இருண்ட யுகத்தில் தொடர்ந்து வாழ முடியாது. இருண்ட யுகத்தில் இருந்து மீள வேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவினால் போரால் தமிழர்கள் மட்டும் அல்ல ஏனையோரும் பாதிக்கப்பட்டனர் என்பது தெரிய வரும். படையினரை பலிகடாவாக்குவதோ, ஜெனிவாவை ஏமாற்றுவதோ அல்ல, எமது பிரச்னையை நாமே தீர்க்கக்கூடிய பொறிமுறையை உருவாக்குவதே இதன் நோக்கம்-என்றார். (அ)

## வெப்பநிலை...

கூறியுள்ளது.

எனினும், மேல் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் பிற்பகல் வேளைகளில் மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் பல பாகங்களில் வெப்பமான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது பொது மக்கள் உரிய பாதுகாப்பு விதிகளை பின்பற்றுமாறும் குறித்த திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

## இலங்கையில்...

அணுசக்தி திணைக் களத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி. ரோசா,

ரஷ்யாவின் ரோஸ்டோம் சீனாவின் தேசிய அணுசக்தி நிறுவன , பிரான் சின் எலக்ரிக் டி பிரான்ஸ் , மற்றும் டென்மார்க்கின் சீபோர்க் ஆகிய நிறுவனங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

அமெரிக்க மற்றும் கனடா நிறுவனங்களும் விருப்பம் தெரிவித்துள்ளன.

ரஷ்யாவின் முன்மொழிவு மிகவும் விரிவானது. பங்களாதேஷில் இரண்டு அணுமின் நிலையங்களையும், கல்பிட்டியில் இருந்து 207 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கூடங்குளத்தில் ஒரு அணுமின் நிலையத்தையும் ரஷ்யா கட்டுகிறது. ரஷ்யர்களும் எமது பிராந்திய முயற்சிகளில் சேர வேண்டும் என நினைக்கிறோம்.

ரோஸ்டோம் அதிகாரிகளுடன் நாங்கள் பல விவாதங்களை நடத்தி, முன்மொழிவுகளை இறுதி செய்துள்ளோம். இதை இறுதி செய்ய, நாம் அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டும்.

நாங்கள் ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு முன்னர் பிரேரணையை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி னோம். ஆனால், இன்னும் எங்களுக்கு பதில் கிடைக்கவில்லை.

இது ரஷ்யா - உக்ரைன் போர் மற்றும் ஐ.எம்.எப். செயல்பாடுகள் காரணமாக தமதமாகலாம். "என்றும் அவர் கூறினார். (அ)

## இலங்கையின்...

தூதக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபலன்களை காண முடிந்துள்ளதாகவும் பீற்றர் ப்ரூவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதென தெரிவித்த அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்ப ணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார். (அ)

## ராஜபக்ஷர்களின்...

இடம்பெற்றுள்ளதுடன், பேச்சுகளில் இணக்கப்பாடுகள் எட்டப்படாமையால் சந்திப்பு தோல்வியில் முடிந்துள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் இவ்வருடத்தின் இறுதி காலாண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால், அரசாங்கத்தால் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெற்றால் ஆளுங்கட்சியால் வெற்றி பெற முடியாதென பல கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருவதுடன், ஆளுங் கட்சி மீதான மக்களின் அதிருப்தியும் இன்னமும் குறையவில்லை.

இதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசனைகளை நடத்தி வருகிறது.

பொதுத் தேர்தலின் எந்தவொரு கட்சியும் இம்முறை பெரும்பான்மையை பெற முடியாதென்றும் தொங்கு பாராளுமன்றமொன்றே உருவாகும் எனவும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

"புத்தாண்டின் பின்னர் பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும்" என ராஜபக்சர்களின் நெருங்கிய சகாவான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்சவின் வருகையுடன் வெளியாகியுள்ள உதயங்கவின் அறிவிப்பை வெறுமனே ஒரு அறிவிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது.

தொங்கு பாராளுமன்றம் அமைந்தால் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க சஜித் தரப்போ அல்லது பசில், ரணில் தரப்போ விரும்பாது.

இதனால் கூட்டணி அரசாங்கமொன்றை மொட்டுக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து உருவாக்கும் சூழலே உருவாகுமென அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பசில் ராஜபக்சவும் ஜனாதிபதி நினைத்தால் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என சூட்சமமான கருத்தொன்றை முன்வைத்திருந்தார். இதனால் வரும் நாட்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் பற்றிய பேச்சுகள் கொழும்பு அரசியலில் சூடுபிடிக்கும்.

இந்த நிலையில், ரணில், மஹிந்த, பசில் சந்திப்பில் அடுத்த தேர்தலுக்கான கூட்டணி தொடர்பில் ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. என்றாலும், ராஜபக்சர்களின் கோரிக்கைகளை ரணில் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிய வருகிறது.

இதனால் இணக்கப்பாடு இன்றி சந்திப்பு நிறைவடைந்துள்ளதுடன், புத்தாண்டுக்கு முன்னர் மீண்டும் கூடி பேச்சுகளை நடத்தி கூட்டணி அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை இறுதிப்படுத்த மூவரும் முயற்சிக்கலாம் எனவும் அறிய முடிகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

## வெண் ஈயின் தாக்கத்தினால் தென்னைச் செய்கை பாதிப்பு!

மன்னார், மார்ச் 09

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து தென்னை செய்கையில் வெண் ஈ யின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலைகளின் பின்புறம் ஒரு சோடி இறக்கை கொண்ட நுளம்பு அளவிலான வெண் ஈக்கள் வாரம் ஒன்றுக்கு சுமார் 100 முட்டைகள்வரையிட்டு தென்னை ஓலையின், பச்சயத்தை சாப்பிடுவதால் ஓலைகள் காய்ந்து வெண்மையாக காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் எச்சங்கள் நாவல், கருப்பு நிறமாக தென்னையின் கீழுள்ள மரங்களின் இலைகளிலும் விழுவதனால் அவை முதலில் கரும்புள்ளியாக மாறி பின்பு பூஞ்சன நோயின் தாக்கத்தினால் மண்ணிறமாக காய்ந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் வெண்ணிற ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஓலைகளை முழுமையாக வெட்டி எரித்து விடுகின்றனர். ஆனால் தென்னை காய்ப்பதற்கு குறைந்தது 10-15 ஓலைகள் அவசியம் என்பதால் ஓலைகளை வெட்டுவது பெரும் பாதிப்பையும் நட்டத்தையும் ஏற்படுத்துவதாகவும் மன்னார் மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தென்னை மரங்களில் அதிகம் பரவியிருந்த வெண் ஈக்கள் தற்போது அனைத்து வகையான தாவரங்களிலும் பரவியுள்ளதோடு அதிகளவு இனப்பெருக்கத்தையும் மேற்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வெண் ஈக்கள் வாகனங்கள் மற்றும் மனிதர்கள் மூலம் பரவக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் இந்த நோய் தாக்கத்தை சாதாரண ஒன்றாக கடந்து செல்லாது தேசிய அனர்த்தமாக கருதி இதனைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## ஹர்ஷ டி சில்வாவின் கோரிக்கையை வரவேற்கின்றார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, மார்ச் 09

**சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்பாடுகளில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கை வரவேற்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2022ஆம் ஆண்டு எவ்வாறான நிலைமை காணப்பட்டது என்பதை இன்று பெரும்பாலானோர் மறந்து விட்டனர். அவற்றில் சிலவற்றை நானும் மறந்து விட்டேன். அன்று எனக்கு இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு கூட ஒரு இடம் காணப்படவில்லை.

இறுதியில் பிரதம நீதியரசரிடம் அறிவித்து விட்டு விகாரையொன்றில் பதவிப்பிரமாணம் செய்தேன். அன்று நாடாளுமன்றத்தை சிலர் சுற்றி வளைப்பதற்கு சதித்திட்டம் தீட்டினர். இராணுவத்தினரால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இன்று அதனை அனைவரும் மறந்து விட்டோம். பொருளாதாரம் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்த போது ஜனநாயக விரோதமாக நான் செயற்படுவதாகக் கூறினர். தேர்தலைக் காலம் தாழ்த்தப் போவதாகவும், சர்வாதிகார ஆட்சி தலைதூக்கவுள்ளதாகவும் கூறினர். ஆனால் இந்தக் காலகட்டத்தில் என்னைப் பற்றி 2000 இற்கும் மேற்பட்ட கேலிச் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

சர்வாதிகார ஆட்சி என்றால் இவற்றுக்கு எவ்வாறு இடமளிக்கப்பட்டிருக்கும்? கடந்த 6ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் சிறந்த யோசனையொன்றை முன்வைத்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரினார். இதனை நான் வரவேற்கின்றேன். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டை செயற்படுத்துவதற்கு முற்படுவோம் என எதிர்த்தரப்பிற்கு அழைப்பு விடுகின்றேன். எதிர்வரும் திங்களன்று இது தொடர்பில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் சகல எதிர்க்கட்சிகளும் பங்கேற்கும் என்று நம்புகின்றேன்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதை விரும்புகின்றேன் - என்றார். (அ)

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 09

மகளிர் தினமான நேற்று முற்பகல் 10 மணி யளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மகளிர் தினத்தை முன்னிட்டும், முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தின் 7 வருட பூர்த்தியினை முன்னிட்டும் இப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போராட்டத்திற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களை சேர்ந்த பிரதிநிதிகள் தென்பகுதியில் இருந்து வருகை தந்த மதகுரு ஜெறாட் ஜெயவர்த்தன உள்ளிட்ட குழுவினர் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்



இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள், நீதி தேவதை ஏன் கண் மூடி விட்டாய்?, சர்வதேசமே இன்று பெண்கள் தினமா? பெண்கள் ஒடுக்கப்படும் தினமா?, முடிவில்லா துயரம் தான் தமிழ் தாயின் தலைவிதியா?, 55 ஆவது தொடரிலாவது எமக்கு நீதி கிடைக்குமா? உள்ளிட்ட கோஷங்களை எழுப்பி தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியிருந்தனர். (அ)

People's Petition
Northern and Eastern Provinces
Civil Society Group
வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு

கருத்தாய்வு

ஜனாதிபதி தேர்தலை
எதிர்கொள்வது எப்படி?

காலம்: 10.03.2024 ஞாயிறு மாலை 4.00 மணி
இடம் : தந்தை செல்வா கலையரங்கம், யாழ்ப்பாணம்

கருத்துரை:
பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்
யதீந்திரா
மரியாம்பிள்ளை செல்வின் இரேனியஸ்

"தேர்தலை எதிர்கொள்வது எப்படி? ஏன்?"
என்ற தலைப்பில்
அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்துரைப்பார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக குழு.
40 Racca Lane, Jaffna, Sri Lanka.
E-mail: nepppcg@gmail.com

## மீண்டும் உயர்வடைந்த மரக்கறிகளின் விலை!

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் கடந்த சில தினங்களாக குறைவடைந்திருந்த மரக்கறிகளின் விலை நேற்று மீண்டும் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, நுவரெலியா உருளைக்கிழங்கு ஒரு கிலோ 370 ரூபாய் முதல் 380 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும், இந்திய உருளைக் கிழங்கு ஒரு கிலோ 185 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும், பாகிஸ்தான் உருளைக் கிழங்கு ஒரு கிலோ 165 ரூபாய் முதல் 190 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தான் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 380 ரூபாய் முதல் 420 ரூபாய் வரையும் இந்திய சிறிய வெங்காயம் ஒரு கிலோ 200 ரூபாய் முதல் 240 ரூபாய் வரையும் யாழ்ப்பாண சிறிய வெங்காயம் ஒரு கிலோ 200 ரூபாய் முதல் 270 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்தோடு, வெள்ளை பூண்டு ஒரு கிலோ 500 ரூபாய் முதல் 530 ரூபாவாகவும் தக்காளி ஒரு கிலோ 1000 ருபாய்க்கும் நேற்றைய மொத்த சந்தையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி 2023 ஆம் ஆண்டில் 700 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையானது கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13 சதவீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் அடையாளங் காணப்பட்ட எயிட்ஸ் நோயாளர்களில் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட 91 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் உள்ளடங்குவதாகவும் தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டில் எயிட்ஸ் தொற்றுக்குள்ளான 59 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது கடந்த ஆண்டில் ஒரு லட்சத்து 68 ஆயிரத்து 309 பேர் எயிட்ஸ் நோய் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 4,706 ஆண்களும் ஆயிரத்து 472 பெண்களும் எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# இங்கிலாந்துடனான டெஸ்ட் முன்னிலை பெற்றது இந்தியா!

தர்மசாலா, மார்ச் 09

தர்மசாலா டெஸ்டின் இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 473 ஓட்டங்களை குவித்துள்ளது. இதன் மூலம் இங்கிலாந்தைவிட இந்திய அணி 255 ஓட்டங்கள் முன்னிலை வகித்து வருகிறது.

தர்மசாலாவில் நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் குல்தீப் யாதவ், அஸ்வின் ஆகியோரின் அபாரமான பந்து வீச்சில் 218 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இங்கிலாந்து அணி 57.4 ஓவர்களை மட்டும் சந்தித்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ஸாக் கிராவ்லி 108 பந்துகளில் ஒரு சிக்ஸர், 11 பௌண்ட்ரிகளுடன் 79 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணி தரப்பில் குல்தீப் யாதவ் 5, அஸ்வின் 4, ஜடேஜா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 30 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்கள் குவித்தது.

தனது 4ஆவது அரைச் சதத்தை விளாசிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் 58 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்கள் விளாசிய நிலையில் சொஹைப் பஷிர் பந்தில் ஸ்ரொம்ப் ஆகி ஆட்டமிழந்தார். தனது 18ஆவது அரைச்சதத்தை விளாசிய ரோஹித் சர்மா 83 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 52 ஓட்டங்களும், ஷுப்மன் கில் 39 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 26 ஓட்டங்களும் சேர்த்த நிலையில் நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

அவ்வப்போது பௌண்ட்ரிகளை விரட்டி ஓட்டங்கள் சேர்ப்பதில் ஆர்வம் காட்டிய அதே வேளையில் விக்கெட் விழாமல் இருவரும் நிதானம் காட்டினார். விரைவாக அரைச்சதம் கடந்த ஷுப்மன் கில், மறுபக்கம் சதத்தை நெருங்கி கொண்டிருந்த ரோஹித்தை முந்தும் முனைப்பில் இருந்தார்.

எனினும், அவருக்கு முன்னதாக 154 பந்துகளை சந்தித்த அணித் தலைவர் ரோஹித் சர்மா 13 பௌண்ட்ரி மற்றும் 3 சிக்ஸர் உடன் நடப்பு தொடரில் இரண்டாவது சதத்தைப் பதிவு செய்தார். சில நொடிகளில் ஷுப்மன் கில்லும் சதம் பதிவு செய்து அசத்தினார்.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு சிறிதுநேரத்தில் 103 ஓட்டங்களில் ரோஹித் ஆட்டமிழந்தார். பென் ஸ்டோக்ஸ் வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே விக்கெட்டை பறிகொடுத்தார் ரோஹித். அடுத்த ஓவரிலேயே ஷுப்மன் கில்லும் விக்கெட்டானார். ஷுப்மன் கில் 110 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்பின், களமிறங்கிய தேவ்தத் படிக்கல் - சர்ப்ராஸ் கான் இருவரும் கூட்டணி அமைத்து சிறப்பாக விளையாடினர். இந்தக் கூட்டணி 93 ஓட்டங்கள் இணைப்பாட்டம் மூலம் சேர்த்தது. அரைச்சதம் கடந்த நிலையில் 56 ஓட்டங்கள் எடுத்திருந்த சர்ப்ராஸ் கானை ஆட்டமிழக்க செய்து சொஹைப் பஷிர் கூட்டணியை பிரித்தார்.

மறுப்பக்கம் டெஸ்ட் கிரிக்கெட்டின் அறிமுகப் போட்டியிலேயே அரைச்சதம் விளாசி அசத்திய தேவ்தத் படிக்கலையும் சொஹைப் பஷிர் ஆட்டமிழக்க செய்தார். படிக்கல் 65 ஓட்டங்கள் சேர்த்தார். படிக்கல்லின் விக்கெட்டுக்கு பின் துருவ் ஜூரெல் மற்றும் ஜடேஜா தலா 15 ஓட்டங்கள், அஸ்வின் பூச்சியம் என அடுத்தடுத்து 3 விக்கெட்களை இழந்தது இந்தியா.

இதன்பின் இணைந்த குல்தீப் யாதவ் மற்றும் பும்ரா இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் இங்கிலாந்து பந்துவீச்சை சமாளித்து ஓட்டங்களை சேர்த்தனர். இதனால், இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 473 ஓட்டங்கள் குவித்துள்ளது.

இதன்மூலம் இங்கிலாந்தை விட இந்திய அணி 255 ஓட்டங்கள் முன்னிலை வகித்து வருகிறது.

குல்தீப் யாதவ் 27 ஓட்டங்கள், பும்ரா 19 ஓட்டங்கள் எடுத்து களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் சொஹைப் பஷிர் 4 விக்கெட், ரொம் ஹார்ட்லி 2 விக்கெட், பென் ஸ்டோக்ஸ் மற்றும் அண்டர்சன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

(ஐ)

## பந்துவீச்சில் நான் பெற்ற பக்குவமே வெற்றிக்கு காரணம்

குல்தீப் யாதவ்



தர்மசாலா, மார்ச் 09

தனது வெற்றிக்கு பந்துவீச்சில் தான் பெற்ற பக்குவம் தான் காரணம் என்று குல்தீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி தர்மசாலாவில் வியாழக்கிழமை தொடங்கியது. முதல் நாளன்று 5 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார் இந்தியாவின் குல்தீப் யாதவ். இதன் பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நான் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகி ஏழு ஆண்டுகள் ஆகிறது. இந்த காலகட்டம் மிகவும் சுவாரஸ்யமானது. நான் எனது ஆட்டம் குறித்து புரிதலை இப்போது சிறப்பாக பெற்றுள்ளேன். விக்கெட்டை எப்படி கணித்து ஆடுவது என்பதை அறிந்துள்ளேன். தரம்சாலா விக்கெட் தரமானதாக உள்ளது. ஒரு பந்து வீச்சாளருக்கு பிரதானமே பிட்னஸ்தான்.

நான் அதில் தீவிர கவனம் செலுத்தினேன். அதன் மூலம் நீண்ட ஸ்பெல்களை என்னால் வீச முடிகிறது. அதற்கு நான் என்னை தயார் படுத்திக் கொண்டேன். தொடக்கதில் பந்து வீசுவதில் சிரமம் இருந்தது. நிறைய மாற்றங்களை மேற்கொண்டேன். தொடர்ந்து விளையாடினால் ஆட்டம் குறித்த புரிதலை பெற முடியும். எனது வெற்றிக்கு பக்குவம்தான் காரணம் என கருதுகிறேன்” என்றார்.

இதுவரை 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ள குல்தீப், 51 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

### இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ்

## வெற்றியுடன் ஆரம்பித்தார் இங்கிலாந்தின் முர்ரே!



இந்தியன் வெல்ஸ்,மார்ச் 09

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் தொடரை இங்கிலாந்தின் அண்டி முர்ரே வெற்றியுடன் தொடங்கினார்.

அமெரிக்காவின் - இந்தியன்வெல்ஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அண்டி முர்ரே ( இங்கிலாந்து), டேவிட் கோபினை (பெல்ஜியம்) எதிர்த்தாடினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய முர்ரே 6-3 மற்றும் 6-2 என்ற நேர் செற் கணக்கில் டேவிட் கோபினை வீழ்த்தி இந்த தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளார்.

## குஜராத்தின் முதல் போட்டியில் மத்தியூ வேட் பங்கேற்கவில்லை

சிட்னி, மார்ச் 09

குஜராத் அணியின் வீரரான மத்தியூ வேட் முதல் போட்டியில் விளையாடமாட்டார் என்று தெரியவருகின்றது.

இந்தியாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் ஐ. பி.எல் கிரிக்கெட் தொடரானது இதுவரை 16 தொடர்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இதன் 17ஆவது சீசன் இந்த ஆண்டு நடைபெறவுள்ளது.

22ஆம் திகதி ஐ. பி. எல். தொடர் ஆரம்பமாகிறது. இதில் இரண்டாவது போட்டியில் குஜராத் - மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்நிலையில் குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரரான மத்தியூ வேட் முதலாவது போட்டியில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் உள்ளூர் தொடரான ஷெபீல்ட் ஷீல்ட் தொடருக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தொடக்க ஆட்டத்தை அவர் தவறவிடுகிறார்.

(ஐ)



# சீனாவுடன் ராணுவ ஒப்பந்தம் செய்தபிறகு, இந்தியா குறித்து மாலத்தீவு அதிபர் என்ன சொன்னார்?

எதிர்வரும் மே 10-ஆம் தேதிக்குப் பிறகு இந்திய ராணுவத்தைச் சேர்ந்த ஒரு வீரர் கூட சீருடையிலோ அல்லது சாதாரண உடையிலோ மாலத்தீவில் இருக்க மாட்டார்கள் என்று மாலத்தீவு அதிபர் முகமது முய்சு தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தான் மாலத்தீவில் உள்ள மூன்று விமான தளங்களை கவனித்துக் கொள்ள ஒரு தொழில்நுட்பக் குழுவை இந்தியா அனுப்பி வைத்தது. இந்நிலையில் முய்சு இவ்வாறு கூறியுள்ளார்.

மே 10-ஆம் தேதிக்குள் இந்தியப் படைகள் மாலத்தீவை விட்டு வெளியேறும் என்றும் அதன் முதல் கட்டம் மார்ச் 10-ஆம் தேதி தொடங்கும் என்றும் இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.





**“மாலத்தீவிற்கு இந்திய ராணுவம் திரும்பி வராது”**

மலத்தீவைச் சேர்ந்த உள்ளூர் செய்தி இணையதளம் ஒன்று அளித்துள்ள தகவலின்படி, கடந்த செவ்வாயன்று மாலத்தீவின் ஜலாஃபுஷி நகரத்தில் ஒரு சமூக நிகழ்வில் உரையாற்றிய அதிபர் முய்சு, இந்திய ராணுவத்தை நாட்டிலிருந்து வெளியேற்றுவதில் தனது அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளதாகக் கூறினார். இதன் காரணமாக பொய்யான வதந்திகளை பரப்பி, நாட்டில் சிலர் குழப்பத்தை உருவாக்கி வருகின்றனர் என்றார்.

“வெளியேறப்போகும் இந்திய ராணுவ வீரர்கள் சீருடையை மாற்றிக்கொண்டு சாதாரண உடையில் மீண்டும் திரும்பி வரப் போவதில்லை. நமக்குள் குழப்பத்தை உருவாக்கும், பொய்களைப் பரப்பும் இதுபோன்ற விஷயங்களைக் நம்பக் கூடாது.

“மே 10ஆம் தேதிக்கு பிறகு சீருடையிலோ அல்லது சாதாரண உடையிலோ, இந்திய ராணுவ வீரர்கள் யாரும் நாட்டில் இருக்க மாட்டார்கள். இந்திய ராணுவத்திற்கும் இந்த நாட்டிற்கும் எந்த வகையிலும் தொடர்பு இருக்காது என்பதை நான் உறுதியுடன் கூறுகிறேன்,” என்றார் அதிபர் முய்சு.

கடந்த பிப்ரவரி 2-ஆம் தேதி டெல்லியில் இருநாடுகளுக்கும் இடையிலான உயர்மட்டக் கூட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, மே 10-ஆம் தேதிக்குள் மாலத்தீவில் உள்ள மூன்று விமான தளங்களை பாதுகாக்கும் தனது ராணுவ வீரர்களை திரும்பப் பெற இந்தியா ஒப்புக்கொண்டதாகவும், இந்த நடைமுறையின் முதல் கட்டம் மார்ச் 10-ஆம் தேதிக்குள் முடிவடையும் எனவும் மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் கூறியது.

முய்சுவின் பேச்சுக்கு ஒரு நாள் முன்னதாக, மாலத்தீவு சீனாவுடன் ராணுவ உதவி தொடர்பான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**சீனா மற்றும் மாலத்தீவுக்கு இடையே கையெழுத்தான ராணுவ ஒப்பந்தம்**

மாலத்தீவில் இருந்து இந்திய ராணுவத்தை வாபஸ் பெறுவதற்கும், இந்திய தொழில்நுட்பக் குழு மாலத்தீவை சென்றடைவதற்கும் காலக்கெடு அளிக்கப்பட்ட பின்னர் சீனா மற்றும் மாலத்தீவுகள் இடையே ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தானது.

திங்களன்று, மாலத்தீவு பாதுகாப்பு மந்திரி முகமது மோமூன் மற்றும் சீனாவின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புக்கான துணை இயக்குனர் மேஜர் ஜெனரல் சாங் பாகுன் ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

“மாலத்தீவிற்கு இலவச ராணுவ உதவியை வழங்குவதன் மூலம் இருதரப்பு உறவுகள் மேம்படும்,” என அப்போது கூறப்பட்டது.

மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் இந்த ஒப்பந்தம் பற்றிய சில தகவல்களை சமூக ஊடகமான எக்ஸில் (முன்னர் ட்விட்டர்) வெளியிட்டது. இருப்பினும் ஒப்பந்தம் பற்றிய விரிவான தகவல்கள் வழங்கப்படவில்லை.

ஜலாஃபுஷி நிகழ்வில், சீனாவுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தம் குறித்து அதிபர் முய்சு பேசினார். மாலத்தீவுடனான ராணுவ ஒத்துழைப்பை சீனா எப்போதும் பேணி வருவதாகவும், இந்த ஒப்பந்தம் மாலத்தீவுகளின் ராணுவத் திறனை மேலும் வலுப்படுத்த உதவும் என்றும் கூறினார்.

“இந்த ஒப்பந்தத்தின்படி, மாலத்தீவு ராணுவத்துக்கு பல வகையான பயிற்சிகள் கிடைக்கும். உயிரிழப்பை ஏற்படுத்தாத பல்வேறு ராணுவ உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். இது தான் எங்கள் ஒப்பந்தம். இது ராணுவத்தின் தொழில்நுட்பத் திறனை அதிகரிக்கும்” என்றார் அதிபர் முய்சு.

மேலும், “நமது ராணுவம் தனித்துச் செயல்படவும், நமது சுதந்திரம் மற்றும் சுயாட்சியைப் பாதுகாக்கவும் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது,” என்றார்.

இது தவிர மாலத்தீவு சுகாதார அமைச்சகத்துக்கு 12 ஆம்புலன்ஸ்களை சீனா வழங்கியுள்ளது. இந்த ஆண்டு ஜனவரியில், முய்சு ஐந்து நாள் பயணமாக சீனாவுக்குச் சென்றிருந்தார். அப்போது, சீன-மாலத்தீவு உறவுகளை முன்னெடுத்துச் செல்ல முடிவு எடுக்கப்பட்டது.

மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் மூசா ஜமீர், சீனாவுடனான ஒப்பந்தம் குறித்து எக்ஸில் (முன்னர் ட்விட்டர்) பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: “சீனா எக்சிம் வங்கியின் பிரதிநிதிகள் குழு மற்றும் சீன இராணுவக் குழுவை வழிநடத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் பாதுகாப்பு கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்து பயனுள்ள விவாதம் நடைபெற்றது.”

மாலத்தீவின் நிபந்தனைகளை ஏற்று தனது படைகளை வாபஸ் பெற ஒப்புக்கொண்டு, ராணுவத்திற்கு பதிலாக ஒரு தொழில்நுட்பக் குழுவை இந்தியா அனுப்பி வைத்துள்ள நேரத்தில் இது நடந்துள்ளது.




**அண்டை நாடுகளை அச்சுறுத்துகிறதா இந்தியா**

இந்த வாரம் டெல்லியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில், இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அண்டை நாடுகளுக்கு இந்தியா ஒரு “பிக் புல்லியாக” (பலவீனமானவர்களை வம்புக்கு இழுப்பவரை பிக் புல்லி- **Big bully** என்று அழைப்பார்கள்) மாறி வருகிறதா என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கரிடம் கேட்கப்பட்டது.

இந்த கேள்விக்கு பதிலளித்த ஜெய்சங்கர், “பிக் புல்லிஸ்” எனப்படுபவர்கள் கடினமான காலங்களில் தங்கள் அண்டை நாடுகளுக்கு ‘37,000 கோடி ரூபாய் வழங்கி உதவுவதில்லை’ என்று கூறியிருந்தார். கடந்த வருடங்களில் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தபோது, அதற்கு இந்தியா உதவியதை அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

எஸ்.ஜெய்சங்கரின் இந்த பதில் மாலத்தீவு ஊடகங்களில் அதிகம் விவாதிக்கப்பட்டு வருவதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. ஜெய்சங்கரின் இந்த பதில், ஜனவரி மாதம் சீனாவுக்குச் சென்ற பிறகு அதிபர் முய்சு அளித்த பேட்டிக்கான பதிலாக பார்க்கப்படுகிறது.

அதிபர் முய்சு அப்போது, “மாலத்தீவு ஒரு சிறிய நாடாக இருக்கலாம், ஆனால் எங்களை அச்சுறுத்தும் உரிமையை எந்த நாட்டிற்கும் நாங்கள் கொடுக்கமாட்டோம்,” என கூறியிருந்தார்.

இந்தியாவின் ஆதரவாளர் என்று தன்னை கூறிக்கொள்ளும் மாலத்தீவின் எம்.பி ஈவா அப்துல்லா, அவர் நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாளிடம் பேசியபோது, “மாலத்தீவின் பலவீனமான வெளியுறவுக் கொள்கை மக்களுக்கு சாதகமாக இல்லை. இது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல, இதுபோன்ற வெளியுறவுக் கொள்கை எந்த வளர்ச்சித் திட்டங்களுக்கும் சாதகமாக இருக்காது,” என்று கூறினார்.

மாலத்தீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத்தின் மருமகள் இவா அப்துல்லா. அவர் இந்தியாவுடனான உறவுக்கு ஆதரவாக பல வாதங்களை முன்வைக்கிறார். மாலத்தீவுகள் இந்தியாவுடன் கலாச்சார உறவுகளைக் கொண்டிருப்பதாகவும் தெற்காசிய ஜனநாயக நாடுகளுடன் நெருக்கமாக இருப்பதாகவும் அவர் விவரிக்கிறார்.

“மாலத்தீவில் மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் கலாச்சார மையங்களை கட்டியுள்ளது இந்திய அரசு. இந்திய கலாச்சாரத்தின் தாக்கம் இங்கு தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவில் இருந்து எதிரொலிக்கும் பதற்ற நிலையை மாலத்தீவுகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை,” என்று ஈவா கூறுகிறார்.

**சீன சுற்றுலாப் பயணிகளுக்கு அழைப்பு**

முய்சு தனது சீன விஜயத்தின் போது, சீன மக்கள் சுற்றுலாவுக்காக அதிக எண்ணிக்கையில் மாலத்தீவுக்கு வரவேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார். கடந்த ஆண்டைப் பொறுத்தவரை மாலத்தீவுக்கு சுற்றுலா செல்வதில் முன்னணியில் இருந்தது இந்தியர்களே.

ஆனால் இந்த ஆண்டு ஜனவரியில் மாலத்தீவின் இளநிலை அமைச்சர்கள் பிரதமர் நரேந்திர மோடியைப் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டனர், அதன் பிறகு இந்தியாவில் ‘மாலத்தீவுகளைப் புறக்கணிக்கவும்’ என்ற பிரச்சாரம் தொடங்கியது. அன்று முதல் மாலத்தீவுக்கான சுற்றுலாவில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது.

1965-இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பிறகு, முதலில் இங்கு முடியாட்சி இருந்தது. பின்னர் நவம்பர் 1968-இல் குடியரசாக அறிவிக்கப்பட்டது. மாலத்தீவு இந்தியாவின் தென்மேற்கில் அமைந்துள்ளது. இந்திய நகரமான கொச்சியில் இருந்து சுமார் ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது மாலத்தீவு.

(16ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவும் சிவில் சமூகங்களும்!

**நிலாந்தன்**



தமிழரசுக் கட்சி அதன் 73 ஆண்டு கால நீண்ட வரலாற்றில் உட்கட்சி மோதல் காரணமாக நீதிமன்றம் ஏற வேண்டிய ஒரு நிலை தோன்றியிருக்கின்றது. இந்த வழக்குகளில் சுமந்திரன் தான் நேரடியாக சம்பந்தப்படவில்லை என்று கூறுகிறார். ஆனால் எல்லாவற்றின் பின்னணிகளும் அவர்தான் இருக்கிறார் என்ற சந்தேகம் பரவலாகக் காணப்படுகின்றது.

தமிழரசு கட்சிக்குள் நடந்த தலைவர் தெரிவில் மட்டும் சுமந்திரன் தோற்கவில்லை. அதன் பின் கட்சிக்குள் நடக்கும் எல்லா விடயங்களிலும் அவர் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு வரை அவரைப் போற்றிப் புகழ்ந்தவர் கம்பவாருதி. வெளிநாடுகளோடு உறவாடவும் வெளிவகாரங்களைக் கையாள்வதற்கும் சுமந்திரனைப் போன்ற சட்டப் புலமையும் ஆங்கிலப் புலமையும் மிக்கவர் தலைமைப் பதவிக்கு வர வேண்டும் என்று தேர்தலுக்கு முன்னரே அவர் எழுதியிருக்கிறார். ஆனால் அதே கம்பவாருதி இப்பொழுது தமிழ் மக்கள் சுமந்திரனைப் போன்ற தந்திரசாலிகளை தலைவர்களாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற பொருள்பட எழுதத் தொடங்கிவிட்டார். அதாவது சுமந்திரனின் ஆதரவு அணிக்குள் இருந்து ஒரு முக்கியமான மதப் பிரமுகர் எதிரணியை நோக்கிப் போகிறார் என்று பொருள்.

கடந்த செவ்வாய்க்கிழமை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன், நல்லை ஆதீன முதல்வர் போன்ற சைவ சமயப் பெரியார்களும் யாழ். மறைமாவட்ட ஆயரும் இணைந்து ஒரு சமாதான முயற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த செவ்வாய் இரவு 8 மணிக்கு நடக்கவிருந்த அந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு இரு அணிகளைச் சேர்ந்தவர்களும் ஒப்புக் கொண்டிருந்தார்கள். எனினும் துரதிஷ்டவசமாக சுமந்திரனின் தாயார் இறந்து போனதால், அந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தியது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு காட்சி ஊடகத்தின் அதிபர் என்ற கருத்து வெளியில் உண்டு. அவருடைய காட்சி ஊடகம் சிறீதரனுக்கு ஆதரவான பிரச்சாரங்களை முன்னெடுத்தது என்று சுமந்திரன் அணியினால் குற்றம் சாட்டப்படுகிறது. இவர்கள் அனைவரையும் இந்தியத் தூதரகம் இயக்குகிறது என்றும் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. மிகக்குறிப்பாக சிறீதரனுக்கு ஆதரவாக ஈழத்து சிவசேனைத் தலைவர் தெரிவித்த கருத்துக்களையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மேலும் தமிழக பாரதிய ஜனதா ஆதரவாளர்களால் அல்லது சிவசேனை ஆதரவாளர்களால் அதிகம் கொண்டாடப்படும் ஓர் இளம் கவிஞரும் சிறீதரனுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்து வருகிறார். தென்மாராட்சியில் இடம்பெற்ற ஒரு கருத்தரங்கில் அவர் பேசியிருக்கிறார். இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து சுமந்திரன் ஆதரவு அணி மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைக்கின்றது.

ஆயின், தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சி மோதலில் இந்தியா சிறீதரனின் பக்கம் நிற்கிறது என்று அவர்கள் கூற வருகிறார்களா? ஒரு பிராந்தியப் பேரரசு கையாளும் அளவுக்கு தமிழரசுக் கட்சியின் உட்கட்சி மோதல் ஆழமானதாக மாறி வருகிறதா? அப்படி என்றால் கட்சிக்குள் தோன்றியிருக்கும் இரண்டு அணிகளையும் இணைப்பது சாத்தியமில்லையா?

கட்சி தொடர்ந்து நீதிமன்றத்தில் நிற்க வேண்டிய ஒரு நிலைமை தொடருமாக இருந்தால், ஒரு தேர்தல் ஆண்டை-இந்த ஆண்டை -கட்சி எப்படி எதிர்கொள்ளப் போகின்றது?

இந்த ஆண்டு மட்டுமல்ல, அடுத்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாகவே அமையலாம் என்று ஊகிக்கலாம். ஏனெனில் இந்த ஆண்டின் இறுதியில் நடக்கக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் வெல்லக் கூடிய தரப்பு பெரும்பாலும் அடுத்த ஆண்டு அந்த வெற்றியை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு நாடாளுமன்ற தேர்தலையும் நடத்தும். தொடர்ந்து மாகாண சபை தேர்தலும் உள்ளூராட்சி சபை தேர்தலும் நடக்கக்கூடும். அதாவது இனிவரும் இரண்டு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகம் தெரிகின்றன.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சியான தமிழரசுக் கட்சி இரண்டாகி நிற்பது யாருக்கு லாபம்?

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குகள் கையெழுத்து வைக்கப்பட்ட பெற்றுக் காசோலையாக ஏதோ ஒரு சிங்கள வாக்காளருக்கு வழங்கப்பட்டு வந்தன. இந்த முறை அதைவிடக் கேவலமான ஒரு நிலை தோன்றலாம். தமிழ் வாக்குகள் வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட வெற்றுக் காசோலையாக மாறக் கூடிய ஆபத்து அதிகரிக்கிறது.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவைச் சரி செய்வதற்கு சிவில் சமூகங்கள் தலையிட வேண்டும் என்ற கருத்தை இக்கட்டுரை ஆசிரியர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். ஆனால் சிவில் சமூகங்கள் இந்த விடயத்தில் தலையிட முடியாத அளவுக்கு பலவீனமாக காணப்படுகின்றன. தேர்தலுக்கு முன்பு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிவில் சமூகம் இரண்டு தரப்புகளையும் மேசைக்கு கொண்டுவர முயற்சித்தது. அந்த சிவில் சமூகத்தின் தலைவர் முன்பு தமிழரசுக் கட்சியில் இருந்தவர். அவர் இப்பொழுது சுமந்திரனுக்கு சார்பாக இருப்பதாக கருதிய சிறிதரன் அணி அந்த சமரசம் முயற்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. அது தொடர்பாக எழுதலாமா என்று இக்கட்டுரை ஆசிரியர் மேற்படி சிவில் சமூகத் தலைவரிடம் கேட்டபோது அவர் அது பகிரங்கமாக முன்னெடுக்கப்படாத ஒரு நகர்வு என்பதனால் எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

அதன்பின் வழக்கிற்கு சில நாட்களுக்கு முன் திருமலை ஆயரின் தலைமையில் நடந்த சந்திப்பும் வெற்றி பெறவில்லை. நல்லை யாதீனத்தில் நடக்கவிருந்த சந்திப்பு சுமந்திரன் தாயாரின் மரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. அதனால் திருக்கோணமலை நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு விவகாரத்தை கட்சிக்குள் சுமூகமாகத் தீர்க்கும் முயற்சிகள் தோல்வியடைந்தன.

இத்தோல்வியில் இருந்து கற்றுக் கொண்டு சிவில் சமூகங்கள் மீண்டும் ஒரு தடவை அவ்வாறான முயற்சியை முன்னெடுக்குமா?

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒப்பீட்டளவில் பலமான சிவில் சமூகமாகிய தமிழ் சிவில் சமூக அமையமானது இந்த விடயத்தில் தலையிடுவதற்குத் தயங்குவதாகத் தெரிகிறது. ஏனெனில் அந்த சிவில் சமூகத்தைச் சேர்ந்த இரண்டு சட்டத்தரணிகள் சம்பந்தப்பட்ட இரண்டு அணிகளுக்கும் சார்பாக நிற்கிறார்கள்.ஒருவர் சிறீதரனுக்கு எதிரான தரப்புக்காக யாழ்ப்பாணத்தில் வாதாடினார். மற்றொருவர் திருக்கோணமலை வழக்கில் சிறீதரனுக்காக வாதிடுகிறார். ஒரே சிவில் சமூகத்தின் இரண்டு சட்டத்தரணிகள் ஒரு கட்சிக்குள் மோதலில் ஈடுபடும் இரண்டு தரப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துவது எதைக் காட்டுகின்றது?

உள்ளதில் பலமான கட்சி இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கின்றது. உள்ளதில் பலமான சிவில் சமூகம் சமரச முயற்சிகளில் ஈடுபாட முடியாத ஒரு நிலை. கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழ் அரசியல் சமூகமும் பலமாக இல்லை; சிவில் சமூகமும் பலமாக இல்லை.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு மக்கள் கூட்டத்தில், அரசியல் சமூகம் பலவீனம் அடையும் பொழுது அல்லது தனக்குள் ஏற்பட்ட ஒரு பிரச்னையை தானே தீர்க்க முடியாத போது சிவில் சமூகங்கள் தலையிடுவதுண்டு. சிவில் சமூகங்கள் பொதுவாக அரசியலில் நேரடியாக ஈடுபட விரும்பாதவர்களால் உருவாக்கப்படுகின்றன. சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு அரசியல் அபிலாசைகள் இல்லை என்பதுதான் அவர்களுடைய மகத்துவம். அவர்கள் சமூகத்துக்கு நீதியானது எதுவோ நன்மையானது எதுவோ அதற்காகப் பக்கச் சார்பின்றி, உள்நோக்கம் இன்றி உழைப்பார்கள் என்ற நம்பிக்கைதான் அவர்களுக்கு உள்ள மகத்துவம். அவ்வாறு நேர்மையாக, நீதியாக இயங்குகின்ற, பக்கம் சாராத சிவில் சமூகப் பிரதிநிதிகள் தலையிடும் பொழுது அதற்கு ஒரு மதிப்பு இருக்கும். கனம் இருக்கும். அவ்வாறான சிவில் சமூகங்கள் அரசியல் சமூகத்தின் மீது தலையீடு செய்யும் பொழுது அது தாக்கமான விளைவுகளை ஏற்படுத்துவதுண்டு. அதைத்தான் பேராசிரியர் உயாங்கொட "அரசியல் கட்சிகளின் மீதான சிவில் சமூகங்களின் தார்மீகத் தலையீடு" என்று வர்ணித்தார்.

அவர் அவ்வாறு வர்ணித்தது 2015 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் நின்ற சிங்களச் சிவில் சமூகங்களுக்குத் தலைமை தாங்கிய மறைந்த சோபித பேரர் அவர்களின் நினைவுப் பேருரையிலாகும். அவ்வாறு அரசியல் சமூகத்தின் மீது தார்மீகத் தலையீடு செய்யக்கூடிய பலத்தோடு தமிழில் இப்பொழுது சிவில் சமூகங்கள் இல்லை.தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவை இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் நீதிமன்றத்துக்குப் போகாமல் தீர்க்க முடியாது போனமை அதைத்தான் காட்டுகின்றது.

சிவில் சமூகங்கள் கட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படுகின்றது. இல்லை. அது தமிழ் மக்களுக்குப் பொருந்தாது. கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளில் சிவில் சமூகங்கள் ஈடுபடலாம் என்றால், ஏன் கட்சிகளுக்குள் ஏற்படும் பிளவைச் சரி செய்வதற்கு சிவில் சமூகங்கள் தலையீடு செய்யக் கூடாது?

தமிழரசுக் கட்சிதான் கடந்த 15 ஆண்டு கால தோல்விகளுக்கும் பொறுப்பு. அதனால் அக்கட்சி அழிந்து போகட்டும் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் கூறலாமா? தமிழரசுக் கட்சி தான் கடந்த 15 ஆண்டு கால தோல்விகளுக்கு பொறுப்பு என்பதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அதற்காக ஒரு தேர்தல் ஆண்டில் அக்கட்சியை முற்றாகச் சிதைய விட்டால் என்ன நடக்கும்? ஒரு தமிழ்த் தேசியப் பேரியக்கம் தேவை என்று எல்லாரும் எழுதுகிறோம். ஆனால் நடைமுறையில் அரங்கில் மக்கள் இயக்கம் எதுவும் கிடையாது. இருப்பவை எல்லாம் தேர்தல் மையக் கட்சிகள் தான். அவற்றின் பிரதான ஒழுக்கம் தேர்தல் அரசியல் தான். இந்நிலையில் பலமான ஒரு மக்கள் இயக்கம் இல்லாத வெற்றிடத்தில், இருக்கின்ற பெரிய கட்சியும் சிதைந்தால் என்ன நடக்கும்?

எனவே இப்போது தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சனையில் சிவில் சமூகங்கள் தலையீடு செய்ய வேண்டும். தமிழ்த் தேசிய உணர்வுடைய சிவில் சமூகங்கள் அவ்வாறு தலையீடு செய்யவில்லை என்றால், அந்த வெற்றிடத்தில் புதிது புதிதாக சிவில் சமூகங்கள் முளைக்கும். அதை ராணுவப் புலனாய்வுத் துறையும் உட்பட வெளிதரப்புகள் இயக்கும். அப்பொழுது என்ன நடக்கும்?

(ஆதவன் செய்தி)

## குப்பைக்குள்ளிருந்த குண்டு வெடித்ததில் ஒருவர் படுகாயம்!

மட்டக்களப்பு, மார்ச் 09

குப்பைக்கு தீ வைத்தபோது அதற்குள் இருந்த குண்டு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காணியை துப்புரவு செய்த உரிமையாளர் குப்பைக்கு தீ வைத்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த நபர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் பதவி விலகினார்!

கொழும்பு, மார்ச் 09

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல நேற்று வெள்ளிக்கிழமை பதவி விலகியுள்ளார்.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஒரு வாரத்துக்கு முன்னர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையை இராஜிநாமா செய்யுமாறு அறிவித்திருந்த நிலையிலேயே அவர் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

(ஐ)

## பெருந்திருவிழா!

மட்டக்களப்பு, மார்ச் 09

வரலாற்று பிரசித்தி பெற்ற பெரியகல்லாறு சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும். இம்முறை இம்முறை கிராமத்தை முழுமையாகச் சுற்றி தேர் இழுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து மறுநாள் 24ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் அடுத்தநாள் 25ஆம் திகதி காலை சங்காபிஷேகமும் மாலை பூங்காவன திருவிழாவும் நடைபெறும்.

(ஐ)

# சீனாவுடன் ராணுவ ஒப்பந்தம் செய்தபிறகு,...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இது 1,200 தீவுகளின் குழுவாகும். பெரும்பாலான தீவுகள் மக்கள் வசிக்காதவை. மாலத்தீவின் பரப்பளவு 300 சதுர கிலோமீட்டர். அதாவது டெல்லியை விட இது ஐந்து மடங்கு சிறியது.

மாலத்தீவின் மக்கள் தொகை சுமார் நான்கு லட்சம். இந்திய திரைப்படங்கள், ஃபேஷன் மற்றும் உணவு ஆகியவற்றின் புகழ் மாலத்தீவிலும் பரவியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான மாலத்தீவு குடிமக்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். சுற்றுலாவுக்காக மட்டுமல்லாது மருத்துவ சிகிச்சைக்காகவும் அவர்களுக்கு மிகவும் பிடித்த நாடாக இந்தியா உள்ளது.

இந்த சிறிய தீவுக் குழுவின் பாதுகாப்பில் இந்தியா முக்கியப் பங்காற்றியுள்ளது. 1988-இல் ராஜீவ் காந்தி ராணுவத்தை அனுப்பி மௌமூன் அப்துல் கயூமின் அரசைக் காப்பாற்றினார். கடந்த 2018-ஆம் ஆண்டு மாலத்தீவு மக்கள் குடிநீர் பிரச்னையை எதிர்கொண்டபோது, பிரதமர் மோதி தண்ணீரை அனுப்பி வைத்தார். இதற்குப் பிறகு மாலத்தீவை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக மோதி அரசு பலமுறை கடன் கொடுத்தது.

### சீனாவிற்கும் இந்தியாவிற்கும் மாலத்தீவு ஏன் முக்கியம்?

மாலத்தீவு 5 லட்சம் மக்கள்தொகை கொண்ட ஒரு சிறிய நாடு, அதன் பொருளாதாரம் சுற்றுலாவை நம்பியுள்ளது. ஆனால், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளான இந்தியா மற்றும் சீனாவுக்கு இந்த சிறிய நாடு மிகவும் முக்கியமானது.

தெற்காசியாவில் தங்கள் ஆதிக்கத்தை அதிகரிக்க இரு நாடுகளும் மாலத்தீவில் நடக்கும் சிறு சிறு முன்னேற்றங்களை உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

நீண்ட காலமாக பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியாக மாலத்தீவின் மிகப்பெரிய நட்பு நாடாக இருக்கிறது இந்தியா. முன்னாள் அதிபர் முகமது சோலியின் அரசிற்கு இந்தியாவுடன் இருந்த நெருக்கம் அனைவரும் அறிந்ததே.

இருப்பினும், சீனா தனது பெரும் நிதி ஆதாரங்கள், உள்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் துறைமுகங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்வதன் மூலம் பல ஆண்டுகளாக தெற்காசிய பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

கோவிட் காலத்தில், பெரும்பாலான நாடுகள் மாலத்தீவின் சுற்றுலாத் துறையில் தங்கள் பணிகளை நிறுத்தியபோதும் கூட சீன நிறுவனங்கள் இங்கு தொடர்ந்து பணத்தை முதலீடு செய்தன. ஆனால் சீன நிறுவனங்களின் இந்தப் பணம் வணிகச் சந்தையில் இருந்து வசூலிக்கப்படவில்லை. இந்தப் பணம் சீனாவின் அரசு வங்கிகளுக்குச் சொந்தமானது. அதாவது இது நேரடியாக சீன அரசாங்கத்தின் பணம்.

முன்னதாக, சோலிஹ் அரசாங்கத்தின் போது மாலத்தீவில் 45-க்கும் மேற்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களில் இந்தியாவின் பங்கு இருந்தது. ஆகஸ்ட் 2021-இல், இந்தியாவிற்கும் மாலத்தீவுக்கும் இடையில் கிரேட்டர் மாலே இணைப்புத் திட்டம் கையெழுத்தானது. இந்த திட்டத்தின் கீழ் இந்தியா 4,100 கோடி இந்திய ரூபாயை நிதியுதவியை வழங்க இருந்தது.

மார்ச் 2022-இல், மாலத்தீவில் பத்து கடலோர ரேடார் அமைப்புகளை நிறுவியது இந்தியா. மாலத்தீவின் அட்டு தீவில் ஒரு போலீஸ் அகாடமியைத் தொடங்கவும் இந்தியா உதவியது.

முய்சு அதிபராக பதவியேற்றதில் இருந்து, சீனாவுடனான மாலத்தீவின் நெருக்கமும் அதிகரித்துள்ளது. பதவியேற்ற பிறகு சீனாவுக்கு தனது முதல் அரசு முறைப் பயணத்தை மேற்கொண்டார் முய்சு.

இந்த வாரம், மாலத்தீவுகளைப் பற்றி ஒரு பேட்டியில் குறிப்பிட்டு பேசிய ஜெய்சங்கர், "உலகம் நன்றியுணர்வின் அடிப்படையில் இயங்குவதில்லை, அது ராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. பிரச்னைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்போம்," என்று கூறியிருந்தார்.

